விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 003 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 07 ஞாயிற்றுக்கிழமை (22.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# அநுரவைக் கொலை செய்வதற்கு முயற்சி

## விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைப் படுகொலை செய்ய முயற்சித்தமை தொடர்பிலான குற்றச்சாட்டொன்று தொடர்பில் குற்றப்புல னாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சீனாவின் ஆர்க் பீஸ் கப்பல்

(கொழும்பு)

ஆர்க்பீஸ் எனப்படும் சீனக் கடற்படையின் மருத்துவக் கப்பல், நேற்றுக் கொழும்புத் துறைமுகத்தை வந் தடைந்துள்ளது. 19

## காலியில் ஒருவர் சுட்டு கொலை

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு குற்றச்செயல்களு டன் தொடர்புடைய 19

## மாகாண சபைத் தேர்தல் இந்தியா அழுத்தம் இல்லை

### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் பிரயோகிக்க வில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரி விக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் விவகாரத் 04

## கொரியாவில் இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்பினை அதிகரிக்குக

### கொரியத் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

கொரியாவில் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்பினை அதிகரிக்குமாறு கொரியத் தூதுவரி டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீ மற்றும் எதிர்க்கட்சித் தலை 19



## படையினர் கையகப்படுத்தியுள்ள மக்கள் காணிகளை விடுவியுங்கள்

### பிரதமரிடம் செல்வம் அடைக்கலநாதன்



19

## வாக்குறுதிகளிலிருந்து அரசு பின்வாங்கப் பார்க்கின்றது

### நோர்வேத் தூதுவரிடம் தமிழரசுக் கட்சி

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கு தல், புதிய அரசியல மைப்பு உருவாக்கம் மற் றும் மாகாண சபைத்தேர்தல் 19



## கசிப்பு உற்பத்தி நிலையம் ஓமந்தையில் முற்றுகை

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை, சேம மடுப் பகுதியில் பல காலமாக சூட்சுமமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் நேற்று முற்று கையிடப்பட்டது.

வவுனியா ஓமந்தை பொலி ஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத் திலக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் சேமமடுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்று கையிட்டனர். 19

## தொடர் திருட்டு வடமராட்சியில் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சியில் தொடர் திருட்டுக்களுடன் தொடர்பு டைய நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரணவாய்ப் பகுதியைச் சேர்ந்த 23 வயதான வரே காங்கேசன் 04

## வெள்ள வாய்க்காலுக்குள் தவறிவிழுந்தவர் மரணம்

### சுழிபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்றவர் வெள்ள வாய்க் காலுக்குள் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இதில் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த கந்தையா சிவனேசன் (வயது-80) என்ற ஓய்வு நிலை அதிபரே உயிரிழந்தவராவார்.

கடந்த 14ஆம் திகதி சண்டி லிப்பாயிலிருந்து சுழிபுரத்தில் இருந்த தமது வீட்டுக்கு கார்த் திகை விளக்கேற்று வதற்காக மோட்டார் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி Northern Hospital முன்பாக 3 பரப்புக் காணியும் யாழ். Clock Tower Roadஅருகில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. (2817)

தொடர்பு:
077 601 1135

## நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்தினருக்குமான விரைவான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை டச்சு வீதி கல்வியங்காடு. பதிவுக்கட்டணம் இலவசம் (659)

076 050 3863
Whatsapp: 076 311 9485

## பகுதி நேர வேலை வாய்ப்பு

- விளம்பர உதவியாளர்
- விற்பனை உதவியாளர் (2818)

நேர்முகத்தேர்வு
22.12.2024 - பி.ப 3 மணிக்கு
173/9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

077 254 0528


## டெங்கு தொடர்பில் எச்சரிக்கை

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47,599 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன் படி, மேல் மாகாணத்தில் 20,519 பேர் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12,030 டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **தங்கவேலாயுதம் தவமலர் (அருந்தவம்)**

மலர்வு 1956.06.12 — உதிர்வு 2023.11.30

திதி : 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை

ஆனந்த சோலையில் கோடி இன்பம் தளைத்தோங்க
உன் அன்பு பொங்க மகிழ்ந்திருந்தோம்
சடுதியாய் நிகழ்ந்து விட்ட உந்தன் மரணம்
எம்மை சருகாய் உலைக்கிறதே
ஆறாகும் கண்ணீரை காணிக்கையாக்கி
உந்தன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று மதியம் இடம்பெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைத்து நிற்கிறோம்.

"திலீபம்"
கொற்றாவத்தை. (C-1869)

குடும்பத்தினர்
077 614 6973


## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (C-1868)

தொடர்புகளுக்கு:
076 315 6470

## வேலையாட்கள் தேவை

- **Data entry:** தரவுகளை கணனியில் பதிவு செய்வதற்கு A/L படித்த கணனி அறிவுள்ள பெண்கள் தேவை.
- **Accounts:** களஞ்சிய கணக்குகளை சரிபார்க்கவும் இருப்புக்களை கணனியில் பதிவு செய்யவும் பெண்கள் தேவை.
- **வாகன உதவியாளர்:** விற்பனை வாகனத்திற்கு உதவியாளர் தேவை. ஆண்கள் 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

குறிப்பு: கோண்டாவில், திருநெல்வேலி, கோப்பாய் அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (2815)

தொடர்பு - 076 328 0381


## மரண அறிவித்தல்



பிறப்பு 23 - 02 - 1944

இறப்பு 21 - 12 - 2024

### திருமதி குலசிங்கம் பரமேஸ்வரி

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் பரமேஸ்வரி அவர்கள் 21.12.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற அருளம்பலம் குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ரமேஸ் (லண்டன்), சியாமளா (உதயா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கீதாஞ்சலி (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் லக்ஷிகா (லண்டன்), லதுஷன் (லண்டன்), சாளினி (லண்டன்), கிருஷணன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புஸ்பவதி (மலேசியா), தவலிங்கம், சற்குணவதி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான காராளசிங்கம், சிவஞானம் மற்றும் புனிதவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் ஊரெழுவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 900 1116 (c-1871) தகவல்: குடும்பத்தினர்


## புதிய காவலன் விவாக பொருத்துனர்


மெய் அன்பர்களே.

புதிய காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம் சிறிது காலம் நடைபெறாது இருந்தது எல்லோரும் அறிந்த உண்மையே.

தற்போது புதிய காவலன் விவாகப் பொருத்துனர் சேவை கோப்பாய், கோண்டாவில் ஸ்ரேசன் றோட்டில் நிரு ரியூசன் சென்ரர் அருகாமையிலும், வடமராட்சி அல்வாய் சதாபொன்ஸ் ரியூசன் அருகாமையிலும் முன்னெடுக்கின்றோம். மேலும், தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த நல்ல மாதத்தில் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்திற்கு எதிரில் கோப்பிறட்டி வளவில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் புதிய காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம் செயற்பட இருக்கின்றது என்பதை வலிகாமம் வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம். எப்போதும்போல் எல்லோரும் பரிபூரண ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் அழைக்கின்றோம். (C-1869)

தொடர்பு -
077 663 0273 (ப.முருகையா)


## விண்ணக வாழ்வின் 13ம் ஆண்டு நினைவலைகள்



Dr. **மரிசலீன்பிள்ளை மரியதாசன் (JP)**
(பேரின்பம்)

சுகாதார வைத்திய அதிகாரி – யாழ் மாநகர சபை (2001 – 2011)

மண்ணில் 12.07.1942 — விண்ணில் 22.12.2011 (656)

ஆவே மரியா
72, கோயில் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றென்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 13 ஆவது திருத்தம் தொடர்பில்

# இந்தியாவுடன் பேச வேண்டிய தேவை ஏற்படவில்லை

### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் குறித்து தெளிவூட்டும் வகையில் அரச தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டின் அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் அது பற்றி இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை.

அரசமைப்பின் பிரகாரம் செயற்பட வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. அதனடிப்படையில் அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்கள் அல்லாமல் புதியவர்களுக்கு வாய்ப்பளிப்பது தொடர்பில் பாராளுமன்ற அனுமதி பெறப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

மேலும் மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படும். எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்டுள்ள சட்ட ரீதியான சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

அது தொடர்பான சட்டத்தை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் மீள்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியாவுடனான கூட்டு அறிக்கையில் தகவல் வெளியிடப்படவில்லை.

ஏனென்றால் அவ்வாறு கலந்துரையாடுவதற்கான தேவை கிடையாது. அரசு என்ற வகையில் அரசமைப்பின் பிரகாரம் நாம் செயற்பாடுகளை முன்னெடுப்போம் என குறப்பிட்டுள்ளார். (நி-8)

# சடுதியாகக் குறைந்த முட்டை விலை




(கொழும்பு)

நாட்டில் சில பகுதிகளில் முட்டை விலை வேகமாகக் குறைந்து வருவதாக முட்டை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி முன்னர் 40 ரூபாய் தொடக்கம் 45 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 25 ரூபாய் தொடக்கம் 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர். (நி-8)

# மகாநாயக்க தேரர்களை சந்தித்த அநுரகுமார



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டுள்ளார்.

முதலில் மல்வத்து விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்து மகாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து அவரிடம் நலம் விசாரித்ததுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியிருந்தார்.

இதில் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அதனையடுத்து மல்வத்து மகாநாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

இதில் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன, பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். (நி-8)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தீவிரப்படுத்தப்பட்ட பாதுகாப்பு

### 40 ஆயிரம் பொலிஸார் கடமையில்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு, பொதுமக்களின் பாதுகாப்பிற்காக நாடளாவிய ரீதியில் 40,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொது மக்கள் நடமாடும் இடங்களில் சீருடை அணிந்த அதிகாரிகளுக்கு மேலதிகமாக 500 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தவிர புலனாய்வு அதிகாரிகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிச்சிறுமியின் பந்துவீச்சை ஜாகீர்கானுடன் ஒப்பிட்ட சச்சின்

## உடனேயே பதிலளித்த ஜாகீர்கான்



ராஜஸ்தானை சேர்ந்த சுசீலா மீனா என்ற பள்ளிச் சிறுமியின் வேகப்பந்து வீச்சு வீடியோக்கள் இணையத்தில் வைரலாகின. இது மாஸ்டர் பிளாஸ்டர் என்று அழைக்கப்படும் முன்னாள் இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் கவனத்தைப் பெற்றுள்ளது.

சுசீலா மீனாவின் பந்து வீச்சுத் திறனை பார்த்து வியந்த சச்சின் அவரின் வீடியோவை தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்து, முன்னாள் இந்திய வேகப் பந்துவீச்சாளர் ஜாகீர்கானுடன் சுசீலா மீனாவின் பந்துவீச்சு பாணியை ஒப்பிட்டு எழுதினார்.

ஹைலைட் என்னவென்றால் இந்த பதிவுக்கு ஜாகீர் கானும் பதில் அளித்துள்ளார். தனது பதிவில் ஜாகீர் கான் கூறியதாவது,

நீங்கள் அதை (சிறுமியின் பந்து வீச்சு பாணியை) கவனித்தறிந்துள்ளீர்கள். அதை நான் முற்றிலும் ஏற்கிறேன்.

அவளது விளை யாட்டு மென்மையாகவும் சுவாரஸ்யமாகவும் உள்ளது.

ஏற்கனவே அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்து விட்டது என்று தெரிவித்துள்ளார். (நி-8)

### 97 ரன்களில் அவுட்

# விரக்தியில் ஸ்டம்புகளை உதைத்த கிளாசனுக்கு அபராதம்



தென் ஆபிரிக்கா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 2 ஆவது ஒருநாள் போட்டி கேப்டவுனில் நடைபெற்றது. இப் போட்டியில் டாஸ் வென்ற தென் ஆபிரிக்க பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 329 ரன்களைக் குவித்தது. இதனையடுத்து கடின இலக்கை நோக்கி களமிறங்கிய தென் ஆபிரிக்க அணியில் ஹென் ரிச் கிளாசன் 97 ரன்களைச் சேர்த்ததை தவிர்த்து மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்ததால் அந்த அணி 43.1 ஓவர்களில் 248 ரன்களுக்கு ஒல் அவுட்டானது.

பாகிஸ்தான் தரப்பில் ஷாஹீன் அஃப்ரீடி 4 விக்கெட்டுகளையும் நசீம் ஷா 3 விக் கெட்டுகளையும் கைப்பற்றினர். இதன் மூலம் பாகிஸ்தான் அணி 81 ரன்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றதுடன் 2-0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது.

இந்நிலையில் இப்போட்டியில் ஐ.சி.சி நடத்தை விதிகளை மீறியதாக தென்ஆபிரிக்க அணியின் விக்கெட் கீப்பர் பேட்டர் ஹென்ரிச் கிளாசனுக்கு ஐ.சி.சி அபராதம் விதித்துள்ளது.

அதன்படி இப்போட்டியில் 97 ரன்களைச் சேர்த்து விக் கெட்டை இழந்த ஹென்ரிச் கிளாசன் விரக்தியில் ஸ்டம்புகளை காலால் எட்டி உதைத்தார். இது ஐ.சி.சி விதி முறைகளுக்கு எதிரானதாகும். அதன்படி இது ஐ.சி.சி விதிமுறை 2.2 இன்படி இது குற்றமாகும்.

இதன் காரணமாக கிளாசனுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதம் அபராதம் விதிப்பதுடன், ஒரு கரும் புள்ளியையும் வழங்குவதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது. மேலும் இதனை கிளாசனும் ஒப்புக்கொண்டதன் காரணமாக மேற்கொண்டு விசாரணைக்கு வரத் தேவையில்லை என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது. (நி-8)

### மாகாண...

தில் இந்தியா அழுத்தம் பிரயோகிக்கவில்லை. தேர்தலை நடத்தி மாகாண அரசியல் தலைமைத்துவத்தை உரிய தரப்பினருக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப் பாட்டில் உள்ளோம். இந்தியா, சீனா உட்பட அனைத்து நாடுகளுடன் இணக்கமாகச் செயற்படுவோம். ஜனவரி நடுப்பகுதியில் சீனாவுக்கு அரசமுறை விஜயத்தை மேற்கொள்வேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

### வெள்ள...

சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது சங்கானை நகரில் உள்ள வெள்ள வாய்க்காலுக்குள் தவறி விழுந்துள்ளார்.

அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சனிக்கிழமை(21) உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

### வடமராட்சி...

துறை பொலிஸ் குற்றதடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மு.உதயானந் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

களவுச் சம்பவமொன்று தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது பல்வேறு பகுதிகளிலும் துவிச்சக்கர வண்டிகளை திருடிய சம்பவங்களுடன் சந்தேகநபர் தொடர்புபட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து சந்தேகநபர் வழங்கிய தகவலுக்கமைய 12 துவிச் சக்கரவண்டிகள் மீட்கப்பட்டது.

கைதான சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட துவிச்சக்கரவண்டிகளையும் நெல்லியடிப் பொலிஸார் ஊடாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 - 11 - 1957 |  | 21 - 12 - 2024 |

### திருமதி ஜெயதேவி செல்வராசா

திருநாவலூர் புலோலி மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயதேவி செல்வ்ராசா அவர்கள் 21.12.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வ.ச.செல்வராசா (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர் - கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் தயாளன் (லண்டன்), சங்கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பருத்தித்துறை), தீபன் (தொழிநுட்ப உத்தியோகத்தர் - கனடா), சஞ்சிதா (லண்டன்), அஜந்தன் (ஸ்ரீ அம்பாள் பெயின்ட் - மந்திகை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் பாராசக்தி, வசந்தாதேவி, விக்னேஸ்வரன், சோமஸ்கந்தன், சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஐஸ்வர்யா, விஜேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை), நிறோஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரவெட்டி), சுதன் ஆகியோரின் மாமியாரும் அபிஷ்ணன், கர்சிகா, அபிவாசன், அஸ்விகா, ஆருஸ், திகாசன், கவிஷ்னா, கவினயன், ஜதீஸ், அனோஜித், அருணிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திருநாவலூர், புலோலி மேற்கு,
பருத்தித்துறை (C-1872)

தகவல் : குடும்பத்தினர்
070 6184705

## விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட இரண்டு கடைகளும்
2. யாழ். K.K.S வீதியில் Signal சந்திக்கு அண்மையில் 20 அடி அகலமும் 160 அடி நீளமும் கொண்ட 3 மாடி கடையும்
3. யாழ். மின்சார நிலைய வீதியில் C.T.B தரிப்பிடத்திற்கு பின்புறத்தில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட கட்டிடம் இரண்டும்
4. யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்
5. யாழ். வெலிங்டன் சந்திக்கு அண்மையில 36 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 4 மாடிக் கட்டிடமும்

விற்பனைக்குண்டு. (C-1864)

தொடர்புகளுக்கு-0777 232 535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா

## 20.12.2024

## எழுத்தாளர்களுக்கான பாஞ்சசன்யம் விருது பெற்றோர்



பேராசிரியர் கு.மிகுந்தன்



வைத்திய கலாநிதி
திருமதி.விவியன் சத்தியசீலன்



கலாநிதி க.தவலிங்கம்



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்

# வாகனங்களின் விலைகள் குறையும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் வாகனங்களின் விலைகள் வேகமாகக் குறையும் என ஜப்பான் இலங்கை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் ஜகத் ராமநாயக்க,

குறைந்த இயந்திர திறன் கொண்ட வாகனங்களே நாட்டுக்கு மிகவும் பொருத்தமானது.

கொவிட் தொற்று நோயுடன், 2021 முதல் நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இதன்படி, அடுத்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அந்த நிலைமையுடன் நாட்டில் வாகனங்களின் விலைகள்வேகமாகக்குறையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


## விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்
12.00-1.00 மணிவரை
தொடர்பு கொள்ளும் நேரம்
9.00-4.00 மணிவரை
தொடர்பு:- 077 34 43 034

(2807)

தொடர்பு:- 077 344 3034

## Florance Nursing Home Care Service Centre
## புளோரன்ஸ் நேர்சிங் ஹோம்கேர் சர்வீஸ் சென்டர்



உங்கள் தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக வீட்டில் வைத்து பராமரிக்க முடியாதவர்கள் பாரிசவாதமுடையவர்கள் மற்றும் நீண்டகால படுக்கை நோயாளிகள் அனைவரையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மிக பாதுகாப்பாகவும் நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

- உணவு முறைகள் மிக ஆரோக்கியமாக வழங்கப்படும்.
- முதியோர்களின் மனநிலையறிந்து / உடல் நிலையறிந்து பொழுது போக்கான விடயங்கள் / உடற்பயிற்சி / பிசியோ தெரபி / மன அமைதிக்கான தியானங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெறும்.
- முதியோர்களின் ஆரோக்கியம் கருதி மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் மாதாந்த கிளினிக் மருத்துவ சேவைகள் என்பன வழங்கப்படும்.
- அவர்களின் வீடுகளில் இருப்பதுபோலவே மகிழ்ச்சியாகவும் அன்பாகவும் எமது தாதியர்களின் மேற்பார்வையிலும் உதவித் தாதியர்களின் பராமரிப்பிலும் பாதுகாக்கப்படுவார்கள்.

மிகக் குறைந்த கட்டணத்தில்
சிறந்த நிறைவான சேவையை வழங்குகின்றோம்.

(2812)

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள
077 718 6438 / 077 482 4473
சுன்னாகம் வீதி, கந்தரோடை, யாழ்ப்பாணம்.

## லங்கா மஹால் (PVT) LTD

DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(692)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9

WESTERN UNION WU · MoneyGram. · Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

## மணமகள் தேவை

1992, இந்து, [illegible], CIVIL ENGINEER
[illegible] - SINGAPORE
[illegible]
(சி-O17)
www.EQMarriageService.com

## மணமகள் தேவை

1997, இந்து, [illegible], DOCTOR
[illegible]
(சி-O17)
www.EQMarriageService.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்களுக்கான பாஞ்சசன்யம் விருது பெற்றோர்



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்



வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன்



திரு.என்.சண்முகானந்தன்



சிவஸ்ரீ சி.பிறைசூடிக்குரு (சோழியூரான்)



திரு.க.கு.க.சிவபாலன்

## திருச்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் யாழை வந்தடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

தமிழக சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனலைதீவைச் சேர்ந்த இரண்டு கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட மூன்று கடற்றொழிலாளர்களும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி அனலைதீவுப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு படகொன்றில் சென்ற இரு கடற்றொழிலாளர்களும் கடற்சீற்றம் காரணமாக தமிழகக் கடற்பரப்பினுள் தத்தளித்த நிலையில் தமிழகக் கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.


அவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நோக்குடன் திருச்சி சிறப்பு முகாமில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவர்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

அவர்களுடன் மட்டக்களப்பைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவரும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவரையும் யாழ்ப்பாணம் அழைத்து வந்து உறவினர்களிடம் கையளித்தனர்.

அதேவேளை அனலைதீவு கடற்றொழிலாளர்கள் இருவரையும் அவர்களின் படகு மற்றும் அதன் வெளியிணைப்பு இயந்திரத்துடன் கடல் வழியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்களின் உறவினர்கள் கடந்த 3 ஆம் திகதி ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33)

## யாழில் காயங்களுடன் மீட்கப்பட்ட முதலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி வீதியில் முதலை ஒன்று காயங்களுடன் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த முதலை வீதிக்கு வந்த வேளை வீதியால் சென்ற வாகனமொன்று அதனை மோதிச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் இது குறித்து வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-33)

# யாழ்.மாநகர சபை வரியிறுப்பாளர்கள் கவனத்திற்கு...

(யாழ்ப்பாணம்)

வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங்களுக்கான 2025 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியினை ஜனவரி 31 ஆம் திகதிக்குள் செலுத்தி 10% கழிவினையும், காலாண்டிற்கான ஆதன வரியினை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தி 5% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேலும் யாழ் மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரையும் வார இறுதி நாட்களிலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் ஆதன வரியினைச் செலுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல் (K from) கிடைக்கப் பெறாதவர்கள் இதற்கு முன்னைய ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல் அல்லது முன்பு ஆதனவரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு அல்லது ஆதனம் அமைந்துள்ள வட்டாரம் வீதி மற்றும் ஆதன இலக்கம் போன்ற விபரங்களைச் சமர்ப்பித்தும் 2025 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியைச் செலுத்த முடியும்.

இதே போன்று கடந்த காலங்களுக்கான ஆதனவரி நிலுவைகளையும் செலுத்துவதன் மூலம் ஏனைய சேவைகளையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும். 2024 ஆம் ஆண்டு ஆதனவரிப் பெறுமதியிலும் கட்டணங்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

ஆதனவரி அறிவித்தல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 221 7697 என்ற தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளுமாறு தெரிவித்தார். (நி-8)

# முதல் டிப்ளோமா விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

டவர் நாடக அரங்கப் பாடசாலை மூலம் நடைபெற்று வருகின்ற தமிழ்மொழி மூலமான இரண்டு வருட முழுநேர நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாட நெறியினை வெற்றிகரமாக முடித்து 2022/23 கல்வியாண்டின் 44 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வானது 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண இந்திய கலாசார மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரம், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 472
Viber 076 636 3378




**இலங்கை அரசின் விருப்பத்திற்கேற்ப ஈழத்தமிழர்களுக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமல் ஈழத் தமிழரின் விருப்பம் எதுவோ அந்தத் தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம்**

# ஈழத்தமிழர்களுக்கு இந்தியா உதவுமா?

இலங்கையில் நடந்த கொடும் போரால் பாதிக்கப்பட்டு இன்றுவரை சொல்லன்னாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறது தமிழினம்.

போர் எனின் சர்வசாதரணமான போர் அன்றி, மிகப் பயங்கரமான போர் நடந்து ஓய்ந்திருக்கிறது இலங்கையில்.

இந்தப் போர் பயங்கரவாதத்தை அழிப்பதாய் இலங்கை அரசாங்கத்தினால் கூறப்பட்டாலும் இதில் படுகொலை செய்யப்பட்டது



அபிமன்யு

அப்பாவிப் பொதுமக்களே அதிகம்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை சர்வதேச ரீதியில் ஏற்கப்பட்டிருந்தாலும் தமிழ் மக்களுக்கான நீதி இன்று வரை வழங்கப்படவில்லை என்பது வேதனையான விடயம்.

போர் நிறைவுற்று இற்றைக்கு 15 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வென்பது கானல் நீராய் இருக்கின்றது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

தொடர்ந்து வரும் அரசாங்கங்கள் பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கினாலும் தமிழர் பிரச்சினை தொடர்பிலும் அதற்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதிலும் அவர்களின் முனைப்பு பூச்சியமே.

நிலை இவ்வாறு இருக்கையில் நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கடந்த திங்கட்கிழமை இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

குறித்த விஜயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார், இக் கலந்துரையாடலின் பின் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஈழத் தமிழர்களின் விருப்பத்தை அநுர அரசு நிறைவேற்றும் என்று இந்தியா நம்புவதாக தெரிவித்திருந்தார்.

குறித்த அவரின் பேச்சின் ஈழத் தமிழர்களின் விருப்பத்தை அநுர அரசு நிறைவேற்றும் என்ற விடயத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதாவது இலங்கை அரசின் விருப்பத்திற்கேற்ப ஈழத் தமிழர்களுக்கான தீர்வை முன்வைக்காமல் ஈழத் தமிழர்கள் விரும்பும் தீர்வை இலங்கை அரசு வழங்க வேண்டும் என்பதே அது.

சர்வதேச நாடுகள் பல இலங்கை மீது கண் வைத்திருந்தாலும் இந்தியாவை மீறி இலங்கையில் எவரும் கால் வைத்துவிட முடியாது.

இதை உணர்த்தும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பேச்சு அமைந்திருந்தது.

அதாவது, இந்தியாவுக்கு எதிராக இலங்கையை எவரும் பயன்படுத்த நான் அனுமதிக்க மாட்டேன் என அவர் தெளிவாகக் கூறியிருந்தார்.

அதாவது சீனாவின் அச்சுறுத்தல் இந்தியாவிற்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், சீனாவின் இலங்கை மீதான கரிசனை இந்தியாவை பெரும் பதற்றத்திற்கு ஆளாக்கியிருக்கிறது.

குறித்த விடயம் இலங்கை அரசிற்கும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பேச்சில் தெளிவாகத் தெரிகிறது.

இந்நிலையில் இந்தியா ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வில் பூரணமாகப் பங்காற்ற வேண்டும்.

அதனூடாக ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வை முன்நின்று நிறைவேற்ற வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் பரிபூரண விருப்பமாகவும் இருக்கிறது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதை கருத்தில் கொண்டேனும் இந்தியா ஈழத் தமிழர் அரசியல் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் அது ஈழத் தமிழரின் நம்பிக்கையை உடைத்தெறிவதாய் அமைந்துவிடும்.

தற்போது வடக்கு கிழக்கில் தமிழ் தேசியத்தைப் பிரதிபலிக்கும் கட்சிகளின் செயற்பாடுகள் படுபாதாளத்தில் இருக்கும் நிலையில் இதை ஆளும்தரப்புக்கள் சாதகமாக பயன்படுத்தவும் வாய்ப்புக்கள் அதிகம்.

எனவே இந்தியா ஈழத்தமிழர் விடயத்தில் முன்நின்று தனது முழு அதிகாரங்களையும் செலுத்தி ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுத் தர வேண்டும். இது அநுர குமார திஸாநாயக்கவின் இந்தியாவுக்கான விஜயத்தின் முதற்புள்ளியாக அமைய வேண்டும். இதுவே ஒட்டுமொத்த தமிழ் மக்களின் விருப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நாட்டில இனவாதத்திற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி ஆகியோர் கூறினாலும் பேரினவாத சிந்தனையோடு இருக்கிறவர்கள் இன்னமும் இனவாதத்தைப் பின்பற்றுகினம் என்பது தான் உண்மை.

**சாத்திரியார்:-** என்ன? விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** தமிழ் அரச உத்தியோகத்தர்கள் சிங்களத்திலும் சிங்கள அரச உத்தியோகத்தர்கள் தமிழிலும் தேர்ச்சியடைய வேணும் என்ற நிபந்தனை இருக்குதல்லோ.

அதன்படி இருதரப்பும் சிங்கள, தமிழ் மொழிகளில் பரீட்சை எடுத்துச் சித்தியடைய வேணும் என்ற நியமம் இருந்தது.

எனினும் தமிழில் சித்தியடைவதில சிங்கள உத்தியோகத்தர்கள் கடும் இடர்பாட்டை எதிர்கொண்டால, மொழிப் பரீட்சையில சித்தியடைய வேணும் எண்ட நிபந்தனையை நீக்கி, சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ் மொழிப் போதனையிலும் தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழிப் போதனையிலும் பங்குபற்ற வேண்டும் என்றும் அவரவர் பதவி நிலைக்கு ஏற்ப, 100 மணித்தியாலம், 150 மணித்தியாலம் எனப் பங்கு பற்றும் காலம் இருக்க வேணும் எண்டும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

**பண்டிதர்:-** ஏன்? விதானையார் அந்த நிபந்தனை நல்லது தானே!

**விதானையார்:-** பண்டிதர் ஐயா நான் அதைச் சொல்ல வரவில்லை.

அண்மையில தமிழ் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான சிங்கள வகுப்பு யாழ்ப்பாணத்தில நடந்திருக்குது.

ஆண்கள் 60, பெண்கள் 60 என 120 பேர் பங்கு பற்றினர்.

அவர்களின்ர வகுப்பு நிறைவில ஆண்கள் அனைவரும் சிங்களவர் போல சாரம் அணிய வேண்டும் என்றும் பெண்கள் சிங்களப் பெண்கள் போல சேலை கட்ட வேணும் எண்டும் சம்பந்தப்பட்ட சிங்கள மொழி விரிவுரையாளர் நிபந்தனை விதித்திருக்கிறார்.

என்ன செய்யிறது. சிங்கள வகுப்பில் பங்கு பற்றியதற்கான சான்றிதழ் வழங்குகின்ற அதிகாரம் சம்பந்தப்பட்ட விரிவுரையாளருக்கு இருப்பதால மூன்று பெண் உத்தியோகத்தர்கள் தவிர, மற்றெல்லோரும் சிங்கள உடை அணிந்து அந்த நிகழ்வில பங்கு பற்ற வேண்டியதாயிற்று.

**மூப்பர்:-** விதானையார், சில வேளை சிங்கள வகுப்பு நிறைவு பெறும் போது, தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள ஆடையிலும் தமிழ் வகுப்பின்ர முடிவில சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ்ப் பண்பாட்டு உடையிலும் பிரசன்னமாக வேண்டுமெண்டு ஏதேனும் நிபந்தனை இருக்குமோ...

**விதானையார்:-** அப்படியொரு நிபந்தனையும் கிடையாது, ஆக, தமிழ் அரச உத்தியோகத்தர்கள் சிங்களப் பண்பாட்டுடன் இருக்க வேணும் எண்ட இனவாதத்தைத் தவிர வேறு எதுவும் அதற்குள் இல்லை.

**பண்டிதர்:-** தமிழர் சிங்களத்தையும் சிங்களவர் தமிழையும் படிக்கிறது நல்லது. ஒரு மொழி தெரிந்தால் ஒரு மனிதன். இரண்டு மொழி தெரிந்தால் இரண்டு மனிதன் என்பது போல, தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்களவர்கள் போல ஆடை அணிந்தால்- சிங்களவர்கள் தமிழர்கள் போல ஆடை அணிய வேணும்.

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாவிட்டால், அது தான் பெரும் பிழை.

**விதானையார்:-** பண்டிதர் நீங்கள் சொல்வது நியாயமானது.

ஆனால் சிங்கள ஆண்கள் அணிகின்ற சாரத்தை எங்கட ஆட்கள் தொடர்ந்து கட்ட மாட்டினம்.

அப்படியானால், ஒரு நாள் கூத்துக்காக அந்தச் சாரத்தை வாங்குவது வீண்தானே.

**கங்காணி:-** அது மட்டுமல்ல சிங்களப் பெண்கள் போல சாறி கட்டுவதாக இருந்தால், அதற்கும் செலவு போகும்.

இப்ப இருக்கிற பொருளாதாரச் சுமையில இதுகள் தேவையில்லை என்பது தான் என்ற நிலைப்பாடு.


**சாத்திரியார்:-** தெரியாமல் தான் கேட்கிறன் இந்த விவகாரம் எங்கட அதிகாரிகளுக்குத் தெரியாதோ.

**விதானையார்:-** எங்கட அதிகாரிகளுக்குத் தெரிஞ்சிருந்தால், அவர்கள் நிச்சயம் அதை அனுமதித்திருக்கமாட்டினம்.

இது முழுக்க முழுக்க சிங்கள விரிவுரையாளரின்ர தனி முடிவு.

அதோட பிரஸ்தாப சிங்கள விரிவுரையாளர் வேறு மாவட்டங்களிலும் இப்படிச் செய்துள்ளதாக அறிய முடியுது.

அதோட சிங்களப் பண்பாடு சார்ந்த ஆடைகளை அணிவது தொடர்பில் ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே ஒத்திகை ஆரம்பித்து விட்டதான கதைகளும் உண்டு.



## வீரசிங்கம் மண்டபத்தை புனரமைப்புச் செய்யீரோ!

**வாத்தியார்:-** விதானையார் விசுவலிங்கம் சொல்லுற விடயம் தொடர்பில எங்கட அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி, அது தொடர்பில ஒரு சரியான நடைமுறையை வகுக்க வேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் கூற, மேற்படி தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேறியது.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவ பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** எங்கட யாழ்ப்பாணத்தில வீரசிங்கம் மண்டபம் ஒரு வரலாற்றுப் பெருமைக்குரிய இடம்.

1974 ஆம் ஆண்டு 2 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது தொடக்கம் பெரும் பெரும் மாநாடுகளும் கூட்டங்களும் இடம்பெற்ற பெருமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்குரியது.

அண்மையில அந்த மண்டபத்தில இடம்பெற்ற ஒரு நிகழ்விற்காக அங்க போயிருந்தன். மண்டபத்தைப் பார்த்த போது மிகவும் கவலையாக இருந்தது. மண்டபப் பராமரிப்பு அறவே இல்லை என்பதை உணர முடிந்தது.

யாழ்ப்பாண மண்ணில எல்லா விழாக்களுக்கும் விளை நிலமாக இருந்த வீரசிங்கம் மண்டபம் இப்ப உடுப்புக்கடையாக மாறியிருப்பது வேதனைக்குரியது.

எனவே வீரசிங்கம் மண்டபத்தைப் பராமரிக்கின்ற கூட்டுறவு அமைப்பினர் அந்த மண்டபத்தை நல்ல முறையில பேணிப் பாதுகாத்து நடன அரங்கேற்றம் முத்தமிழ் விழா, கலை நிகழ்வுகளுக்கு உதவக் கூடிய வகையில மிகச் சிறப்பாக ஆக்க வேணும்.

அதைப் புனரமைப்புச் செய்வதற்காக கொழும்பில உள்ள தூதுவராலயங்களிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அதன் மூலம் புனரமைப்புச் செய்ய வேணும்.

அதோட உடுப்பு வியாபாரத்திற்காக மண்டபத்தை வழங்குவது அவ்வளவு பொருத்தமல்ல என்பதையும் இந்த வேளையில் கூற விரும்புகிறன்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








தட்டாதெரு சந்தியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த பசுவிற்கு அங்கு சிலை வைப்பார்களா வியாசரே?

வலம்புரியின் ஆண்டுவிழா சிறப் பாக நடைபெற்றது. அவ்விழா தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?

**தருஷ் வதிரி**

**வியாசர் மனைவிக்கு அடக்கமாமே உண்மையா?**

மனைவி எதைச் சமைத்தாலும் குறை ஏதும் கூறாமல் சாப்பிட்டு முடிக்கிறீர்கள் என்றால் நீங்கள் நாற்பது வயதைக் கடந்து விட்டீர்கள் என்று அர்த்தம்.
இதில் வியாசர் வேறு தருஷ் வேறில் லையே. எல்லோரும் ஒரே இனம். அது மனைவிக்கு அடங்கிப் போகும் ஆணி னம்.

**சுந்தரம் துன்னாலை**

**தட்டாதெரு சந்தியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த பசுவிற்கு அங்கு சிலை வைப்பார்களா வியாசரே?**

மின் கம்பத்தின் அருகில் இருந்த மரக் குழையைச் சாப்பிட முற்பட்ட வேளை பசு மாட்டை மின்சாரம் தாக்கியிருக் கிறது.
பசுவுக்குப் பதில் இதுவே மனிதர் இருந்திருந்தால் என அவ்விடத்தில் பலர் பேசிக் கொண்டனர்.
முட்டாள் மனிதனே உங்களைக் காக்க நான் என்னைத் தியாகம் செய்திருக்கி றேன். நீயோ இப்படிப் பேசுகிறாய் என பசுவின் ஆத்மா பேசிக் கொண் டது.

**தில்லைநடராஜன் அத்தியடி**

**வலம்புரியின் ஆண்டுவிழா சிறப் பாக நடைபெற்றது. அவ்விழா தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?**

நடுவுநிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ் எனும் மகுட வாச கத்தை தாங்கி வரும் வலம்புரி ஒரு நாளும் அறத்தை மீறி நடந்ததில்லை.
வலம்புரிச் சங்கு பரந்தாமன் கையில் இருக்கும் சங்கு. அந்தச் சங்கொலி தர்மத்துக்குரியது. அதர்மத்தை ஒழிக்க வல்லது.
வலம்புரியை வீழ்த்த போடப்படும் சூழ்ச்சிகள் ஒரு நாளும் வெல்லாது. ஏனென்றால் வலம்புரியிடம் இருக்கும் ஆத்ம பலம் வாசகர்களாகிய உங்களு டைய அன்பின், நம்பிக்கையின் வெளிப் பாடு.
வெள்ளிவிழா சிறப்பாக, அருமையாக நடந்து முடிந்தது. அதற்கு இறைபரம் பொருளிற்கு நன்றி.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்

**மந்து காரைக்கால்**

**நகைச்சுவை மன்னன் வியாசரே ஒரு நகைச்சுவை கூறுங்களேன்?**

ஒருவர்: மனிதராய்ப் பிறந்த எல்லோருக்கும் விதியைக் கடவுள் எழுதியிருக்கிறான். எனக்கு மட்டும் நியூட்டன் எழுதியிருப்பார் போல.
மற்றவர்: ஏன் அப்படிக் கூறுகிறாய்?
ஒருவர்: வாழ்வில் எவ்வளவு வேக மாக மேலே போனாலும் அதை விட வேகமாக கீழே வந்துவிடுகி றேனே?

–சுட்டது–

**இந்து மாதகல்**

**வாழ்க்கையைக் கற்றுக்கொள் வது எப்படி வியாசரே?**

மரக்கறிச் சந்தையில் ஒருவர் காயப்படாத, அழுகிப் போகாத தக்கா ளிப் பழங்களைப் பொறுக்கும் பொறு மையில் தெரியும் அவர் வாழ்வில் எவ்வளவு அடி வாங்கியிருக்கிறார் என்று.

**தனுசன் ஆனைக்கோட்டை**

**தமிழர்களுக்கு தனிநாடு வழங் குவதில் இந்தியா பின்நிற்பது இந்திய மாநிலங்கள் பிரிந்து விடும் என்பதற்காகவா வியா சரே?**

ஒரு நாட்டை பிரிப்பதற்கோ, கூறு போடுவதற்கோ வேறு எந்த நாட் டிற்கும் அதிகாரம் இல்லை என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
இலங்கை இறையாண்மையுள்ள நாடு. அப்படிப்பட்ட நாட்டில் இறங்கி அதன் பகுதிகளைப் பிரிக்கவோ, கையகப்படுத்தவோ எந்த நாட்டிற்கும் அதிகாரம் இல்லை.
அப்படிப்பட்ட ஒரு செயலை இந்தியா விரும்பவும் மாட்டாது.
எமது பிரச்சினைகளை நாம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றே இந்தியா நினைக்கும்.

**சுதன் குப்பிழான்**

**தந்தையின் பாதுகாப்பைக் குறைத்தவுடன் தனையன் அழுது புலம்புகிறாரே?**

வாழ்க்கை ஒரு வட்டம். இங்கு வென்றவன் தோற்பான். தோற்றவன் வெல்வான் என்ற ஒப்பற்ற தத்து வத்தை இப்போது அந்தத் தந்தையும் அவர் கம்பனியும் விளங்கிக் கொண் டிருக்கும்.
வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த கொடுமைகளுக்கு அரசனின் தீர்ப் பிலிருந்து யாரும் தவறிவிடலாம்.
இறைவனின் தீர்ப்பில் இருந்து தவற முடியாது என்பதைப் புரிந்து கொண் டால் சரி.

**மதுவன் மீசாலை**

**நடிகைமணி வி.வி.வைரமுத்து இல்லாது போன பின்னர் கலை களும் அழியத் தொடங்கி விட்ட தல்லவா வியாசரே?**

கலைகளைப் பாதுகாக்கவும் கலை ஞர்களை மதிக்கவும் தெரியாத இந்த நவீன சமூகத்தில் கலையும் கலை ஞனும் இருப்பதிலும் அழிந்து போவது எவ்வளவோ மேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




1952 இல் பிரதமர் டி. எஸ் சேனநாயக்க இறக்க டட்லி சேனாயக்க பிரதமரானார். 1953 இல் டட்லி சேனநாயக்க அரசியல் நெருக்கடி காரணமாகத் தனது பதவியை ராஜினாமா செய்ய சேர். ஜோன் கொத்தலாவல பிரதமரானார். அவர் பிரதமரான அடுத்த வருடமே (1954) யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண வருகை தந்தார். கொக்குவிலில் நிகழ்ந்த கூட்டத்தில் சிங்களமும் தமிழும் அரசமொழிகளாகும் தமிழுக்கு சம அந்தஸ்து என்று வாக்குறுதியளித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டை இவற்றையெல்லாம் பார்த்துச் கொண்டிருந்தது. அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பொலிஸாரின் விடுதிகளும் சிறைச்சாலையும் இயங்கிவந்தன. அரச விருந்தினர், உயர் அதிகாரிகள் வந்து தங்கும் மாளிகையாக "குயின்ஸ் ஹவுஸ்" விளங்கியது. வேறெவ்வித முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் யாழ்ப்பாணக் கோட்டை ஆட்படவில்லை.

சேர் ஜோன் கொத்தலாவலவின் வாக்குறுதிக்கு மாறாக, SWRD பாண்டாரநாயக்க "சிங்களமட்டும்" என்ற இனவாதத் கொள்கையை ஆட்சியைக் கைப்பற்றும் துரும்பாகப் பிடித்துக் கொண்டார். சேர் ஜோன் கொத்தலாவல கொக்குவில் வாக்குறுதியைக் கைகழுவியும், பண்டாரநாயக்கவை ஆட்சிக்கு வராது தடுத்துவிடமுடியவில்லை. 1956 இல் பண்டாரநாயக்க பிரதம மந்திரியாகப் பதவியேற்று இருபத்திநான்கு மணி நேரத்துள் "சிங்களம் மட்டும்" சட்டத்தை காலிமுகத்திடலில் சத்தியாக்கிரம் செய்த தமிழரின் இரத்தத்தின் சாட்சியத்தில் நிறைவேற்றினார் அதன் பயனாக தமிழருக்கு எதிரான வகுப்பு வாதக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

1957 இல் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதனை எதிர்த்து ஜே. ஆர். ஜயவர்த்தன சுண்டிக்குப் பாதயாத்திரை நடாத்தினார். அதேவேளை பண்டாரநாயக்க ஆட்சியில் சுகாதார அமைச்சராகவிருந்த விமலா விஜயவர்த்தன பௌத்த பிக்குகளோடு பிரதமரின் இல்லத்திற்கு ஊர்வலம் சென்று, அந்த ஒப்பந்தத்தைக் கிழித் தெறியவைத்தார். 1958 இல் இலங்கையின் முன்னெப்போது மில்லாத விதமாகத் தமிழருக்கு எதிரான வகுப்பு வாதக் கலவரம் வெடித்தது.

எல்லாமாகச் சேர்த்து திரண்டு 1959 இல் பண்டாரநாயக்க தான் உருவாக்கிய வன்முறைக் கலாசாரத்திற்கே பலியாகினார். பிரதமர் தனது இல்லத்தில் வைத்து பிக்கு ஒருவனால் சுடப்பட்டு இறந்தார். 1960 இல் இலங்கையின் முதலாவது விதவைப் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியிலேறினார்.

(தொடரும்...)

---

# கடல் புறா

## எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்




காலத்தின் பதிவு 133

அதனால் நிமிர்ந்து இளைய பல்லவனை நோக்கிய கூலவாணிகனின் கண்களில் வியப்பும் பிரமிப்பும் கலந்து படர்ந்தன. இளையபல்லவன் கண்கள் குடியால் சிவந்து கிடந்தாலும் முகத்தில் சாந்தம் நிலவிக் கிடந்தது. பேச்சிலும் அந்த சாந்தம் ப்ரவியிருந்தது. "சேந்தா!" என்று மறுபடியும் அழைத்தான் இளையபல்லவன்.

ஏன் படைத்தலைவரே?" என்று கேட்டான் சேந்தன். உன்னை மிகவும் சோதனை செய்துவிட்டேன் என்றான் இளையபல்லவன் நிதானத்துடன்.

ஆம். ஆம்.ஏதோ சொல்ல வேண்டுமென் பதற்காகச் சொன்னான் சேந்தன்.

என் உத்தரவுகளை என்று இழுத்தான் இளைய பல்லவன். சொன்னபடி நிறைவேற்றி விட் டேன் என்றான் கூலவாணிகன்.

"இல்லை நிறைவேற்றவில்லை," என்ற இளைய பல்லவன் குரலில் நிதானமிருந்தாலும் குற்றச்சாட்டும் இருந்தது.

எதை நிறைவேற்றவில்லை? என்று கோபத்துடன் கேட்டான் சேந்தன். பலவர்மன் பொக்கிஷப் பெட்டிகளையெல்லாம் திறந்துவிட்டாயா? ஆகா! திறந்துவிட்டேன். இல்லை! இன்னும் பாக்கியிருக்கிறது.

கிடையாது. பொக்கிஷ அறையில் பலவர்மன் பெட்டிகள் பத்து இருந்தன. அவை அனைத்தையும் திறந்து விட்டேன். அவற்றில் ஆறு பெட்டிகளையும் இந்த மாத முடிவுக்குள் தீர்த்துக் கட்டிவிடுவேன். அப்புறம் பலவர்மன் பிச்சை எடுக்க வேண்டியதுதான்.

இளையபல்லவன் கூலவாணிகன் பேச்சைத் திருப்தியுடன் கேட்டாலும் முடிவில் மெல்லச் சொன்னான். இல்லை சேந்தா! பலவர்மன் உன்னை ஏமாற்றி விட்டான் என்று.

கூலவாணிகன் முகத்தில் ஆச்சரியம் மூண்டது. இல்லை! ஏமாறவில்லை. பெட்டிகள் அனைத்தும் என்னிடமிருக்கின்றன என்றான் அவன். இல்லை, உன்னிடமில்லை திட்டமாக வந்தது படைத்தலைவன் பதில்.

பத்துப் பெட்டிகளின் சாவிகளும் இதோ இருக்கின்றன என்று மடியிலிருந்த சாவிக்கொத்தைத் தட்டிக் காட்டினான் சேந்தன்.

பெட்டிகள் பதினொன்று என்று கூறி இளைய பல்லவன் கூர்ந்து நோக்கினான் கூலவாணிகனை. பதினொன்றா! ஆம் பதினொறாவது பெட்டி எங்கிருக்கிறது?

பலவர்மனின் அந்தரங்க அறையில் இருக்கிறது. அந்த அறையில் எங்கே? தரையில் புதைக்கப்பட்டிருக்கிறது அந்த இரும்புப் பேழை. இந்தப் பத்து பெட்டிகளில் இருக்கும் செல்வத்தை விட அதில் அதிகச் செல்வமிருக்கிறது.

அதன் சாவி? பலவர்மன் கழுத்திலுள்ள தங்கச் சங்கிலியில் இருக்கிறது. அத்தனை பத்திரமாக வைத்திருக்கிறானா? ஆமாம்.

"அதை..." என்று கூறிய கூலவாணிகன், இளைய பல்லவனை அச்சத்துடன் நோக்கினான். "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் இளையபல்லவன். அந்தத் தலையசைப்பைக் கண்ட சேந்தன் முகத்தில் ஈயாடவில்லை. அதை...

அதை.. எடுக்க என்னால் முடியாது..படைத்தலைவரே! என்று பயத்தால் குரல் நடுங்கக் கூறினான் சேந்தன்.

எடுக்க வேண்டாம் சேந்தா! வேறு வழியிருக்கிறது. என்று சுட்டிக் காட்டினான் இளைய பல்லவன். "என்ன வழி?" என்று வினவினான் சேந்தன் அச்சம் சிறிதும் அகலாமலே.


உன்னிடம் மெழுகு இருக்கிறதல்லவா?" என்று கேட்டான் இளையபல்லவன். எந்த மெழுகு? நம் நாட்டில் பிரதிமைகள் செய்ய அமைப்பு எடுக்கும் மெழுகு. இருக்கிறது."

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் பிரமாண்ட கல்சின்னம்

**இதை உருவாக்க ஸ்காடிஷ் மற்றும் வேல்ஷ் மக்கள் தங்கள் நிலத்திருந்து பிரமாண்ட பாறைகளை நீண்ட தூரம் கடந்து எடுத்து வந்துள்ளனர்.**



பிரமாண்டமாக அடுக்கப்பட்ட கற்களின் அமைப்பாகும். இது தெற்கு இங்கிலாந்தில் உள்ள சாலிஸ்பரி சமவெளியில் அமைந்துள்ளது.

கிமு.3100 மற்றும் 1600 ஆண்டுகளுக்கு இடையில் உருவாக்கப்பட்ட இந்தச் சின்னத்தை ஒவ்வொரு ஆண்டும் சுமார் பத்து லட்சம் மக்கள் உலகம் முழுவதிலுமிருந்து வந்து இந்த பிரமாண்டத்தைப் பார்த்துச் செல்கின்றனர். இந்த இடத்துக்கு நெடுந்தொலைவில் உள்ள தென் மேற்கு வேல்ஸ் மற்றும் வடகிழக்கு ஸ்கொட்லாந்தில் இருந்தெல்லாம் மிகப்பெரிய கற்களை கொண்டுவந்து இந்த சின்னத்தை உருவாக்கியுள்ளனர்.

ஏன் கட்டப்பட்டது? இத்தனை பிரசித்தி பெற்ற மனிதர்களின் கடும் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த சின்னத்தை யார் கட்டியது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதை ஏலியன்கள்தான் கட்டின என்ற கருத்தும் நிலவியது. காரணம் இப்படி ஒரு கற்களின் பிரமாண்டத்தைக் காட்சிப்படுத்தும் சின்னத்தை உருவாக்க காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை தெரியாமலேயே இருந்தது. தற்போது ஆராய்சியாளர்கள் அந்த விடையை கண்டறிந்துள்ளனர்.

பண்டைய பிரிட்டனை ஒற்றுமைப்படுத்தவே இந்த சின்னம் உருவாக்கப்பட்டி ருப்பதாகக் கூறுகின்றனர். (பிரிட்டன் என்பது வேல்ஸ், ஸ்காட்லேண்ட் மற்றும் இங்கிலாந்து ஆகிய இராஜ்ஜியங்களின் கூட்டு.) ஐரோப்பாவிலிருந்து புதிய நபர்கள் வந்து பிரிட்டன் பேரரசை உருவாக்குவதற்கு பல நூற்றாண்டுகள் முன்பே இது உருவாக்கப்பட்டதாக கூறுகின்றனர்.

இதை உருவாக்க ஸ்காடிஷ் மற்றும் வேல்ஷ் மக்கள் தங்கள் நிலத்திருந்து பிரமாண்ட பாறைகளை நீண்ட தூரம் கடந்து எடுத்துவந்துள்ளனர். அதன் மூலம் பிரிட்டனில் உள்ள அனைத்து நாடுகளின் பங்களிப்பும் இதில் உறுதி செய்யப்படுகிறது. மேலும் அரசியல் ஒற்றுமையையும் வலியுறுத்துகிறது.

எப்படி கட்டப்பட்டது? தனித்தனியாக இருக்கும் சமூகங்களை அடையாளப்படுத்தவே விசித்திரமான கற்கள் கொண்டு வந்து அடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கற்களை நீண்ட தூரம் எடுத்து வருவதற்கு ஆயிரக் கணக்கான மக்கள் 8 மாதத்துக்கு மேல் உழைத்திருப்பதாக குறிப்பிடுகின்றனர்.

ஸ்காட்லாந்தில் இருந்து தெற்கு இங்கிலாந்துக்கு இந்த கற்களை எடுத்து வருவது அசாதாரணமான காரியம் அல்ல... ஆனால் இரண்டு மக்கள் இனத்துக்குள்ளும் ஒத்துழைப்பு இருந்திருக்கும் என ஆய்வில் எடுத்துரைக்கின்றனர்.

மூன்று நிலங்களிலும் ஒரே மாதிரியான கலாசாரம், மரபு நிகழ்வதால் இந்த ஒத்துழைப்பு சாத்தியப்பட்டிருக்கும் என்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ... சொன்ன செய்தி



மனிதாபிமானம், இரக்க குணம் என்பன மனிதர்களிடத்தே மரத்துவிட்டது. அதிலும் தமிழ் மக்களிடம் அது இம்மியும் இல்லாது போய்விட்டது என்பது தான் வேதனைக்குரியது. இது எங்கனம் நடந்தது என்று தெரியவில்லையாயினும் இதன் விளைவு மிகப் பாரதூரமானது என்பதற்கான எச்சரிக்கை மணி அண்மையில் அடிக்கப்பட்டிருக்கிறது.

ஆம், அண்மையில் யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில் பசு மாடு ஒன்று மின்சாரம் தாக்கி பலியான செய்தி அறிந்து மனம் பதைபதைத்து போனது. மின்சாரக் கம்பத்தைச் சுற்றி மண்டிக் கிடந்த மரக்கிளைகளில் செறிந்த மின்சாரத்தை அறிந்திராத பசு, அதை உண்ண முற்பட்ட போது அந்தப் பயங்கரம் நடந்தேறியது.

ஓ.. மானிடனே என்னை மின்சாரம் தாக்குகிறது என்பதை அம்மா அம்மா என்று இரங்கி அழுது உதவிகோரியது அந்த ஐந்தறிவுடைய ஜீவன். ஆயினும் ஆறறிவு படைத்த மனிதன்; மின்சாரம் தாக்கி அம்மா என்று கதறும் அந்தப் பசுவைக் காப்பாற்ற முற்படவில்லை.

சற்றுத் தாமதமாக அங்கு வந்த அன்பர் ஒருவர் தன் உயிரையும் பாராது அந்தப் பசுவைக் காப்பாற்ற முனைகிறார். தன்னந்தனியாக பசுவின் கொம்பைப் பிடித்து இழுக்கிறார். மின்சாரம் அவரையும் தாக்குகிறது. ஆயினும் அவர் முயற்சியைக் கைவிடவில்லை. நீண்ட போராட்டத்திற்கு பின் ஒருவாறு பசுவை மின்சாரப் பிடியில் இருந்து மீட்டெடுத்தார் அந்த அன்பர்.

அவரின் முயற்சி பயனின்றிப்போனது. பசு மின்சாரத்திற்கு இரையாகிப் போனது. பசுவின் இறப்பு பலரையும் மனவருத்தத்திற்கு உள்ளாக்கிய தாயினும் அங்கு நின்றிருந்தவர்கள் முயற்சித்து இருந்தால் பசுவைக் காப்பாற்றி இருக்கலாம் என்பது பசுவைக் காப்பாற்ற முற்பட்ட அன்பரின் ஆதங்கம். அந்த ஆதங்கத்தின் வெளிப்பாடு அவரின் பேச்சுக்களில் கோபமாய் கொப்பளித்தது.

மின்சார சபையின் அசண்டையீனமே இந்தப் பசு இறப்புக்கு காரணம் என்பதை அவர் திரும்பத் திரும்ப ஆக்ரோசமாக கத்திக் கூறிக் கொண்டு இருந்தார். அவரின் கோபத்தையும் பேச்சையும் அங்கு குழுமி நின்றவர்கள் ஏற்றுக் கொண்டனர். சன நடமாட்டம் மிக்க இடத்தில் இவ்வாறு மின் ஒழுக்கு ஏற்படும் வகையில் இருப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

மனித உயிர், மிருகங்களின் உயிர் என்று பார்க்கும் பார்வையைத் தவிர்த்து எமது அசண்டையீனத்தால் ஒரு உயிர் கூடப் பிரிந்து விடக் கூடாது என்பதில் நாம் ஒவ்வொருவரும் உறுதியாக இருக்க வேண்டும்.

மனிதர்களின் உயிர் காக்க தன் உயிரை விட்ட பசு தன்னை ஆறறிவு படைத்த மனிதர் காப்பாற்று வார்கள் என நம்பியது. ஆயினும் அந்தப் பசுவின் நம்பிக்கை தோற்றுப் போனது.

எம்மவர்களின் இதய இறுக்கங்கள் மனிதாபிமானத்தை மரத்து விடச்செய்துவிட்டது என்பதையே பசுவின் மரணம் உணர்த்தி நிற்கின்றது.

**இந்திர புத்திரன்**

## வலி சுமந்த மேனியர்

நம் இனத்தின் ஒட்டு மொத்த நலன்களை
புறம் தள்ளி
கலப்படமற்ற சுயநலத்தோடு
ஆளுக்கொரு கட்சியென
அரசியல் செய்யப் புறப்பட்டு
காலத்தால் அழியாத
கறை படிந்து போனதே
தேர்தல் என்ற திருவிழாவில்

வாய் வலிக்க வார்த்தைகள் வீசி
வண்ண வண்ணமாய்
காகிதங்கள் விதைத்தும்
வெற்றித் தெரிவுக்கு
வழி இல்லை என்ற போது
மக்கள் திசைமாற
பாதை போட்டவர்களின்
வேடங்கள் வெளிச்சுப் போக
வேரறுந்த விருட்சங்களாய்
வீழ்ந்து விட்டோமே
கடவுளே
உன் கருணை
இருந்தால் மட்டுமே
இனி வரும் காலமாயினும்
இனிக்கும்
இல்லை என்று போனால்
மனக் காயங்களுடன்
மீண்டும்
வலி சுமக்கும் மேனியராவோம்..


தேன்நிலா

## நல்லாள்கை செய்திடுவோம்

அமிழ்தினும் இனிய
கல்வியினை
ஆர்வமுடன் நாம் கற்று
இவ்வரிய பிறவி தனில்
ஈடிணை இன்றி வாழ்ந்திடுவோம்

உண்மை பலம் சேர்க்க
ஊக்கமஃது துணை புரிய
எடுத்த செயல் அனைத்தும்
ஏற்றம் உற (அடைய) உழைத்திடுவோம்


ஐயம் இன்றி அனைவரும்
ஒரு பெருந்தலைமை(த்துவ)
பாதையில்
ஓர் அணியாய் செயற்பட்டு
ஔவைக்கும் அறிவுரைக்கும்
- தமிழர்களாய்
அகிலமஃதை நல்லாள்கை
செய்திடுவோம்.



அழகன்

## எமது தாய் மண்

வீசும் காற்றுக்கு
எல்லை இல்லை
ஓடும் நீருக்கும்
தடைகள் இல்லை
நம் தாய்நாட்டில்
எம்மை தலைநிமிரச்
செய்யாமல் எமது நிலத்தையும்
எமது சுதந்திரத்தையும்
பறிக்கும் தேக்கத்தில்
இந்த வேலி
தமிழ் மகன்
ஒற்றுமையுடன்
கைகோர்த்தால்.. இந்த
உலகத்தையே
விடுதலையாக்க
முடியும் –நமது
தாய் நிலத்தில் வேலி
இனி தேவை இல்லை
எமது பலம் ஒற்றுமை



த.வினுசியன்,
அரசடி, வட்டுக்கோட்டை.

## மௌனத்தின் தேடல்-741



### நல்லுள்ளங்கள்

நல்லெண்ணங்கள்
உதயமாக
நல் உள்ளங்கள் வளர வேண்டும்
வாகன ஓட்டியின் நன்மை
கருதியே நீயும்
லாவண்யமாய் குடைபிடித்து
நிற்கின்றாயே
மாதரசியே உன் சிந்தனையை
என்ன வென்பேன்
மாநிலத்தில் பெண்ணின்
பெருமை தன்னை
உணர்த்தியே நிற்கும்
உன் செயலை போற்றுகின்றேன்.

ஆ.செல்வி, திருநாவலூர்.

### குடை பிடிக்கும்...

சமுதாயத்தில் அடித்தட்டு வாழ்க்கை
சயிக்கிள் றிச்சோ சாரதியின் தரம்
சவாரி கிடைப்பதோ நாளில் ஒன்று இரண்டு
மழை பெய்தால் அன்று பூச்சியம் ஆகும்
ஏதோ கிடைத்த பயணியை ஏற்றிச் செல்ல
எனக்கு குடை பிடிக்கும் உத்தமி யார்?

பி.மதுஷ்சன், தையிட்டி.

### மனித நேயம்

குடை நிழலிருந்து
குஞ்சரம் ஊர்ந்தோர் கடை
மெலிந்தோரூர் கண்ணிலும்
கண்ணுவர் எனும்
வாக்கிற்கமைய மிதிவண்டிக்
கூடார சொகுசு மெத்தையில்
அமர்ந்திருந்து பயணித்தாலும்
அவ் வண்டிதனை
செலுத்திச் செல்பவர்
மழையில் நனைவதைக் கண்டதும்
உன் குடை தனை விரித்து
நனையாதிருக்க
அம் மனிதர் மேல் பிடிக்கும் பெண்ணே
உன் செயல்
ஓர் உன்னதமான மனிதநேயமுள்ள
செயற்பாடே

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

### மழை வந்தால்...

இயந்திரமும் இல்லை புகையும் இல்லை
வேகமும் இல்லை விபத்தும் இல்லை
சுற்றுச் சூழலுக்கு பகையும் இல்லை
மனித சக்தியால் செல்லும் வண்டி
செலவும் குறைவு சௌக்கிய பயணம்
மழை வந்தாலும் பயணம் மகிழ்ச்சிதான்.

பிரமன், கொக்குவில்.

### எழுதாத சட்டம்

இந்தப் பரந்த பிரபஞ்சத்தில் பந்தாய் உருண்டு செல்லும்
இப் புவிக்கும் எல்லையுண்டு இல்லையெல்லை அன்பிற்கு
அடையா நெடுங் கதவிற்கு சடையப்ப வள்ளல் சொந்தக்காரர்
இரக்க குணம் இவ்வாறு இரத்தத்தில் கலந்திருந்தாலும்
தனக்கு மிஞ்சின மிகுதி தான்
தானமும் தருமமு மென்றாகி இலை மறை காயானாலும்
இன்றும் உயிர் வாழ்கின்றது.

க.[illegible] நுணாவில்.

## மௌனத்தின் தேடல்- 742



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

### "பெண் தெய்வம்"

அம்மா தெய்வமே!
நீங்கள்
மழையில் நனைந்தாலும்
சாரதி நனைந்துவிடக்
கூடாது என
எண்ணும் தாய்மை
நிறை தெய்வம்
தாங்கள் துயர்காணாது
விலகிச் செல்லும்
இக் காலத்தில்
அம்மா பூமிக்கு வந்த
பெண் தெய்வம்
பயணத்திற்கு கூலி
அதனிலும்
மேல் மனிதநேயம்
காட்டும்செயலிது!
பெண்ணே வாழ்க

அபி குலமாலிகா,
சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்:வீரபாண்டிய கட்டபொம்மன்
இயற்றியவர்: கு.மா. பாலசுப்பிரமணியம்
பாடியவ்ர்: எஸ். வரலக்ஷ்மி
இசை: ஜி. ராமநாதன்



சிங்காரக் கண்ணே உன் தேனூறும் சொல்லாலே
தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி
சிங்காரக் கண்ணே உன் தேனூறும் சொல்லாலே
தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி
மங்காத பொன்னே
மங்காத பொன்னே உன் வாய் முத்தம் ஒன்றாலே
மாறாத இன்பங்கள் சேர்ப்பாயடி
சிங்காரக் கண்ணே உன் தேனூறும் சொல்லாலே
தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி

வாடாத ரோஜா உன் மேனி
வாடாத ரோஜா உன் மேனி - துள்ளி
ஆடாதே வா சின்ன ராணி
பூவான பாதம் நோவாத போதும்
புண்ணாகி என் நெஞ்சம் வாடும்
பாராளும் மாமன்னர் மார் மீதிலே நீ
சீராட வாராய் செந்தேனே - இந்தப்
பாராளும் மாமன்னர் மார் மீதிலே நீ
சீராட வாராய் செந்தேனே

சிங்காரக் கண்ணே உன் தேனூறும் சொல்லாலே
தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி

செவ்வல்லிக் கை வண்ணம் காட்டி ஆ..ஆ..
செவ்வல்லிக் கை வண்ணம் காட்டி எங்கள்
சிந்தை எல்லாம் இன்பமூட்டி நீ
ஆடாதே கண்ணே யாரேனும் உன்னை
கண்டாலும் ஆகாது மானே
அன்பென்னும் ஆனந்தப் பூங்காவிலே நீ
பண் பாட வாராய் செந்தேனே

சிங்காரக் கண்ணே உன் தேனூறும் சொல்லாலே
தீராத துன்பங்கள் தீர்ப்பாயடி

# விரலசைவில் அடங்கும் 64 கட்ட மந்திர உலகம்!

"என்னுடைய முழு உலகமும் இந்த 64 கட்டங்களுக்குள்தான் அடங்கியிருக்கிறது. நான் இங்கே சௌகரியமாக உணர்கிறேன். என்னால் இந்த உலகத்தைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். என்னால் இங்கே முழுமையாக ஆதிக்கம் செலுத்தவும் முடியும். இங்கே அடுத்து என்ன நடக்கும் என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும்.

ஓர் உலகத்தையே கட்டி ஆளும் நம்பிக்கையில் சதுரங்கம் குறித்து 'Queen's Gambit' தொடரின் முக்கியமான கதாபாத்திரம் பேசும் வசனம் இது. குகேஷும் இப்போது அப்படியொரு நிலையில்தான் இருக்கிறார். 64 கட்டங்களுக்குள் வெள்ளையும் கறுப்புமாக அவர் உருவாக்கி வைத்திருக்கும் உலகத்தின் மத்தியில் 'உலக சம்பியன்' எனும் அரியாசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார்.

பாபி பிஷர், அனதோலி கார்போவ், கேரி கேஸ்பரோவ் என அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் மட்டுமே ஆதிக்கம் செலுத்திவந்த செஸ்ஸில் இந்தியாவின் தடத்தை அழுத்தமாகப் பதித்தவர் விஸ்வநாதன் ஆனந்த். 5 முறை உலக சம்பியனாகி செஸ் உலகின் கவனம் மொத்தத்தையும் இந்தியாவின் பக்கம் திருப்பினார். 2013இல் விஸ்வநாதன் ஆனந்திடமிருந்து கார்ல்சன் உலக சாம்பியன் பட்டத்தைப் பறித்தார். ஆனந்தால் அதை மீட்டெடுக்கவே முடியவில்லை. ஆனாலும் இந்தியாவில் ஆனந்த் விதைத்த விதை ஆலமராக விருட்சமடைந்தது. பிரக்ஞானந்தா, குகேஷ், அர்ஜுன் எரிகசி, விதித் குஜராத்தி என ஒரு தங்கத் தலைமுறையே உருவாகியது. விஸ்வநாதன் ஆனந்தின் பேட்டனை வாங்கிவிட்டு ஓட வேண்டிய இந்த ரேஸில் முன்னிலை எடுத்திருப்பது குகேஷ்தான்.

சிங்கப்பூரில் நடந்த உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி பலவிதங்களில் குகேஷுக்கு சவால் மிக்கதாக இருந்தது. இது அவருக்கு முதல் உலக செஸ் சம்பியன்ஷிப். மேலும் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பும் குகேஷின் மீதுதான் இருந்தது. ஏனெனில், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டிங் லிரன் ஆரம்பத்திலிருந்தே தன் மீதான எதிர்பார்ப்புகளை இறக்கி வைக்கும் வேலையைக் கவனமாகச் செய்திருந்தார். இயான் நெப்போம்னியாச்சியை வீழ்த்தி உலக சம்பியனான டிங் லிரன் அதன்பிறகு பெரிதாக சோபிக்கவில்லை. தன்னுடைய ஃபார்மை இழந்தார். ஆனால் அதை வைத்தே தனக்காக வியூகத்தையும் அவர் வகுத்தார். 'கடுமையாகப் போராடுவேன். என் சிறப்பான ஆட்டத்தை ஆடுவேன். குகேஷை வீழ்த்த முயல்வேன்." இப்படியெல்லாம் லிரன் பேசவில்லை. மாறாக தன்னை மேலும் தாழ்வாகக் காட்டிக்கொள்ளும் வகையிலேயே பேசிக்கொண்டிருந்தார். "நான் என்னுடைய சிறப்பான காலகட்டத்தைக் கடந்து விட்டேன். மனதளவில் சோர்ந்திருக்கிறேன். குகேக்கு எதிராக எப்படி வெல்வேனென்று தெரியவில்லை" என போட்டிக்கு முன்பான ஒவ் வொரு பேட்டியிலுமே புலம்பினார்.

குகேஷின் பெற்றோருக்கும் அவரின் வெற்றியில் பெரும்பங்கு இருக்கிறது. 'உங்களின் பிள்ளைகள் எதில் ஆர்வம் காட்டுகிறார்களோ அதில் மேன்மேலும் வளர ஊக்குவியுங்கள். உங்களால் இயன்றதை அவர்களின் வளர்ச்சிக்காகச் செய்துகொடுங்கள்" என்கிறார் குகேஷின் தந்தை ரஜினிகாந்த். வெற்றிகரமான அந்த 58 ஆவது நகர்வை முடித்துவிட்டு கண்ணீர் உடைந்த கண்களோடு குகேஷ் ஓடி வந்து கட்டியணைத்தது ரஜினி காந்தைத்தான். அந்த அணைப்பின் கதகதப்பை ஒவ்வொரு பெற் றோரும் உணர வேண்டும் என்பதுதான் ரஜினிகாந்த் சொல்லும் மெசேஜ்.

சம்பியன் ஆகிவிட்டு ஆனந்தத்தில் கண்ணீர் சிந்துகிறார். அவரால் அந்தத் தருணத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்படியொரு சமயத்திலும் அமர்ந்திருந்த சீட்டை சரியாக நேர்த்தியாக அதன் இடத்தில் இழுத்துப் போட்டுவிட்டுதான் வெளியே வந்தார். 'என் மகன் ஒரு சம்பியன் என்பதைவிட நல்ல பண்பாளனாகவே அறியப்பட வேண்டும்' என்ற தன் அம்மா பத்மாவதியின் ஆசையையும் சேர்த்துதான் குகேஷ் ஒவ்வொரு முறையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

சமீபத்தில்தான் செஸ் ஒலிம்பியாடில் இந்தியாவைத் தங்கம் வெல்ல வைத்தார் குகேஷ். ரேட்டிங்கிலும் புலிப்பாய்ச்சலை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். இப்போது உலக சம்பியனும் ஆகிவிட்டார். ஆனால் வயது என்னவோ 18 தான். 130 ஆண்டுகளுக்கும் மேல் நீளும் செஸ் சாம்பியன்ஷிப் வரலாற்றில் மிக இளம் வயது சம்பியன் குகேஷ்தான்.

சாதனையாளர் ஆகத் துடிக்கும் அத்தனை பேருக்குமே ஏதோ ஒரு நொடியில் ஒட்டு மொத்த உலகமும் நம்மைப் பற்றியே பேச வேண்டும் என்கிற ஆவல் இருக்கும். அந்த ஒரு நொடிக்கான தேடலில்தான் அவர்களின் ஒட்டுமொத்த காலச்சக்கரமும் சுழன்று கொண்டிருக்கும். சம்பியன்ஷிப்பின் 14ஆவது சுற்றில் டிங் லிரன் 55ஆவது நகர்த்தலில் பெரும் தவற்றை இழைக்க அடுத்த மூன்றே நகர்வுகளில் குகேஷ் போட்டியை முடித்து சம்பியன் ஆனபோது ஒட்டுமொத்த உலகின் கவனமும் அந்த ஒரு நொடியில் குகேஷின் மீதுதான் இருந்தது. சாதிக்கத் துடிக்கும் 18 வயது இளைஞனுக்கு வேறு என்ன வேண்டும்? ஆனால் குகேஷ் இன்னும் ஓயவில்லை. "எனக்கு இது போதாது. சம்பியன்ஷிப்பைக் கடந்து ஆனந்தைப் போல கார்ல்சனைப் போல, காலத்துக்குமான வீரனாக நிலைத்து நிற்க வேண்டும்" என்கிறார். இந்த 64 கட்டங்களும் குகேஷின் விரலசைவுக்கு அடங்கிப் போகும் மந்திர உலகமாக இருக்கும் போது அவரின் ஆசை நிறைவேறாமலா போகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 429

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஈரல் பாதுகாப்பும் குடிவகை பாவனையும்...

எமது பிரதேசத்தில், குறிப்பாக இளம் வயதினரிடையே மதுபான பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த மதுபான பாவனை காரணமாக ஈரலில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறுகிய கால மற்றும் நீண்ட கால ஈரல் பாதிப்புகள், இந்த அதிகரித்த மதுபான பாவனையால் ஏற்படுகின்றன. குறுகிய கால ஈரல் பாதிப்பான, ஈரல் அழற்சி (Alcoholic hepatitis) என்பது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும்.

இதன் காரணமாக கடுமையான நோய் நிலைமை மற்றும் மரணம் கூட சம்பவிக்கலாம். இந்நோய் நிலையின் அறிகுறிகளாக கண் மற்றும் உடல் மஞ்சள் நிறமாதல், வலது பக்க மேல் வயிற்றுப் பகுதியில் நோ காணப்படல், உணவில் விருப்பமின்மை, வாந்தி, நினைவுக் குழப்பங்கள் போன்றவை காணப்படுகின்றன. இந்த நோய் நிலைமை ஏற்பட்டவர்களுக்கு, பின்னர் சிறுநீரக பாதிப்பு, குருதி உறையாத தன்மை போன்ற தீவிர நோய் நிலைமைகளும் ஏற்படும்.

இது, இறுதியில் Acute liver failure எனப்படும் குறுகிய நேரத்தில் ஏற்படும் ஈரல் செயலிழப்பிற்கு இட்டுச் செல்லும். இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகளே காணப்படுகின்றன. எனவே, இந்நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு மதுபானம் அருந்தாமல் தவிர்ப்பதே சிறந்த வழியாகும்.


மதுபானம் அருந்துவதால் ஏற்படும் நீண்ட கால பாதிப்பாக Liver Cirrhosis எனப்படும் ஈரல் பழுதடையும் நிலை ஏற்படும். ஈரல் பழுதடைந்துவிட்டால், மீண்டும் அதனை பழைய நிலைக்கு மாற்ற முடியாது. ஈரல் செயலிழப்பால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அல்லது விளைவுகளுக்கு மட்டுமே சிகிச்சையினை மேற்கொள்ள முடியும். ஈரல் பழுதடைந்த ஒருவருக்கு, அதன் செயற்பாடுகளை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றுவதாயின், ஈரல் மாற்று சத்திரசிகிச்சை மட்டுமே காணப்படும் ஒரே தீர்வாகும்.

நிரந்தர ஈரல் பழுதடைதல் ஏற்பட்டால், அதன் அறிகுறிகளாக கால்கள் மற்றும் வயிற்றுப் பகுதிகளில் வீக்கம் காணப்படல், கண்கள் மஞ்சள் நிறமடைதல், நினைவுக் குழப்பங்கள் காணப்படல், இரத்த வாந்தி எடுத்தல் போன்றவை காணப்படுகின்றன. நிரந்தர ஈரல் பாதிப்பு ஏற்பட்டவர்களில் ஈரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன. எனவே, நிரந்தர ஈரல் செயலிழப்பு ஏற்பட்டவர்கள் தொடர்ச்சியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். முதலாவதாக, இந்நோய் நிலைமை கண்டறியப் பட்ட உடன் வைத்தியர் கூறும் உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

அத்துடன், மதுபானம் அருந்துவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். இந்நோய் கண்டறியப்பட்டவர்கள் ஆரம்பத்திலேயே, வாயினூடாக Camera செலுத்தி செய்யப்படும் Endoscopy என்ற பரிசோதனையைச் செய்ய வேண்டும். இந்நோய் உள்ளவர்களுக்கு களம், இரைப்பை போன்ற பகுதிகளில் இரத்தக் குழாய்கள் வீக்கமடைதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குருதி குழாய்களில் வீக்கம் காணப்படுமாயின், அவர்களுக்கு இரத்த வாந்தி ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகும். இது ஒரு அவசரமான, ஆபத்தான நிலையாகும். எனவே, ஆரம்பத்திலேயே இந்நிலையை கண்டறிந்தால், அதற்குரிய சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். கடுமையான இரத்தக் குழாய் வீக்கம் உள்ளவர்களுக்கு Endoscopy மூலம் அதனை கட்டுப்படுத்துவதற்குரிய Plastic Band போடுதல் மற்றும் மருந்தேற்றுதல் போன்ற வழிமுறைகள் உள்ளன.

சிறியளவில் வீக்கம் உள்ளவர்களுக்கு, மருந்துகளைப் பாவிப்பதன் மூலம், அந்த வீக்கத்தினை குறைத்துக்கொள்ள முடியும்.



கால் மற்றும் வயிற்றுப் பகுதியில் வீக்கமுடைய, ஈரல் செயலிழந்த நோயாளிகள் தமது உணவில் உப்பின் அளவை குறைவாக எடுக்க வேண்டும். குறிப்பாக, உப்பு அதிகமாக உள்ள உணவு வகைகளான கருவாடு, ஊறுகாய், மாமைட் மற்றும் பக்கற்றுகளில் அடைக்கப்பட்ட உப்பு சேர்க்கப்பட்ட உணவுப் பதார்த்தங்களை உட்கொள்வதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். புரத உணவுகளை சாதாரணமான அளவுகளில் எடுக்கலாம். ஆனால், அதிகமாக புரத உணவுகளை உட்கொள்வது நல்லதல்ல.

ஈரல் செயலிழப்பு ஏற்பட்டவர்களில், ஈரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருப்பதால், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஈரலை Scan செய்து பார்ப்பதன் மூலமும் ஒரு குறிப்பிட்ட இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமும் ஈரல் புற்றுநோய் இருப்பதைக் கண்டறியலாம். இதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், அதற்கு பலவிதமான சிகிச்சைகளை உடனேயே மேற்கொள்ளலாம். எனவே, இப்பரிசோதனைகளைச் செய்வதன் மூலம், ஆரம்பத்திலேயே ஈரல் புற்றுநோயை கண்டறிவது பயனுள்ளதாக இருக்கும்.

இதைவிட, ஈரல் செயலிழப்பு நோயாளிகளில் மலச்சிக்கல் காணப்படுமாயின், அவர்களில் நினைவுக் குழப்பங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகும். எனவே, ஒரு நாளைக்கு இரண்டு தடவையாவது, மலம் கழிக்கத்தக்கவாறு மருந்துகளை எடுக்க வேண்டும். Lactulose எனப்படும் பாணி மருந்தினை, அவர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் பாவிக்க வேண்டும். இதனால், நினைவுக் குழப்பங்கள், தூக்கத்தில் ஏற்படும் பிரச்சினைகள் ஆகியவற்றை சரி செய்ய முடியும்.

எனவே, மதுபான பாவனையை முற்றாக தவிர்ப்பதன் மூலம் ஈரலில் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.


**Dr. அனுராதா கஜேந்திரன்**
**உணவுக் கால்வாய், ஈரல் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிப் வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமபிதா காட்டிய பாதை

### எங்கள் எலிசபெத் யார்?



திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறின் பைபிள் பகுதி லூக்கா: 01:39-45 இல் இருந்து தரப்படுகின்றது. கடவுளைக் கருவினில் சுமந்து கொண்டு மேரிமாதா, திருமுழுக்கு யோவானைச் சுமந்து கொண்ட அவரது உறவினர் எலிசபெத்தைச் சந்தித்தார். மேரிமாதாவின் வாழ்த்துக்களை எலிசபெத்து கேட்ட பொழுது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட மகிழ்ச்சிக்காக அவளது வயிற்றில் உள்ள குழந்தை துள்ளிற்று.

இந்த நிலையில் ஓர் இளம் பெண்ணை (மேரிமாதாவை) கற்பனை செய்தால் அவள் பல விடை காணமுடியாத கேள்விகளுடன் இருந்திருப்பாள். கணவனில்லாது கருத்தாங்குவதை எண்ணிப் பயத்தில் வாழ்ந்திருப்பாள். இருப்பினும் மேரிமாதா எலிசபெத்தை அடைய கரடுமுரடான பாதைகள் வழியாக நடந்து செல்கிறார். இந்த எலிசபெத்தை கற்பனை செய்தால், அவள் இயேசு பிறப்பதற்கு முன்பே, அவரை அங்கீகரிக்கும் வகையில் அவளுடைய இதயம் துள்ளிக் குதிக்கிறது. எலிசபெத்தின் வார்த்தைகள் பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தை யும் ஆசிபெற்றதே. இது கடவுளின் மீட்புத் திட்டத்தில் மேரிமாதா தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புப் பங்கை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. இது மனித புரிதலால் அல்ல. ஆனால் இது நம் நடுவில் தெய்வீக வெளிப்பாடு. இருப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. கடவுளின் வாக்குறுதிகளின் மகிழ்ச்சியையும் நிறைவேற்றத்தையும் குறிக்கிறது. கடவுளின் திட்டங்கள் எதிர்பாராத வழிகளில்கூட வாழ்க்கையையும்நம்பிக்கையையும்கொண்டு வருகின்றன என்பதை நினைவூட்டுவதாகும்

கடவுளின்பணி அமைதியான, தாழ்மையான இடங்களில், அவருடைய விருப்பத்திற்குத் திறந்த மனதுடன் இருப்பவர்கள் மூலம் தொடங்குகிறது என்பதை இந்த சந்திப்பு நமக்கு நினைவூட்டுகிறது. இந்த சந்திப்பு வெறுமனே ஒரு குடும்ப செயல் அல்ல. மேரிமாதாவின் இளம் வயது மற்றும் அவரது நிலைமையின் சவால்கள் மத்தியில் அவர் மலை நாட்டிற்கு "விரைந்தார்". இந்த சந்திப்பு விசுவாசம், பணிவு மற்றும் கடவுளின் தெய்வீகத் திட்டத்தின் சக்தி என்பதை நினைவூட்டுகிறது. கடவுளின் விருப்பத்தை மனத்தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள மேரிமாதாவின் விருப்பம் அனைத்து விசுவாசிகளுக்கும் ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டு. எலிசபெத்திடம் அவரது வருகை ஆசீர்வாதங்களைப் பகிர்வதையும் கடவுளின் அற்புதங்களுக்கு சாட்சியம் அளிப்பதன் மூலம் வரும் மகிழ்ச்சியையும் குறிக்கிறது.

பாவத்தில் வாழ்ந்த இப்புவுலகம், மேரிமாதா "ஆம்" என்று கூறிய ஒற்றை வார்த்தையால் மாறிப்போனது. பாவத்தைப் போக்கி இப்பூவுலகைப் புதுப்பிக்க விரும்பிய இறைவனின் முயற்சிக்கு "ஆம்" என்று கூறிய வார்த்தை வழியாக உடன் நின்றவர் நம் மேரிமாதா. பாவம் என்னும் கொடிய சாத்தானை வெல்லும் பேராயுதமாக, இவ்வுலகை மீட்கும் திட்டத்தில் தன் உடன்பங்காளராக, துணை மீட்பராக மேரிமாதாவை கடவுள் தெரிந்து கொள்கின்றார். தொடக்கத்திலேயே இவ்வுலகிற்குக் கடவுளால் அறிமுகம் செய்து வைக்கப்படும் மேரிமாதா மறுவுலகிலும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஆண்டவரின் அழியாத கோவிலாக கடவுளின் பேழையாக எடுத்துக் காட்டப்படுகின்றார் (திவெ 11:19).


அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவளித்தனர். ஊக்கமளித்தனர். அவர்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் அவர்களின் வாழ்க்கையில் கடவுளின் மகத்துவத்தை ஒப்புக்கொண்டனர். மேரிமாதாவும் எலிசபெத்தும் சொல்லித்தரும் பாடங்கள் பல உள்ளன. இவ்விருவரும் தங்கள் வாழ்வில் இறைவனைத் தேடியவர்கள். தன்னைத்தேடியவர்களைத் தேற்ற இறைவன் வந்தார் என்பதை ஆணித்தரமாக உணர்ந்தனர்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான எல் சால்வதோரின் தலைநகரான சான் சால்வதோரில் பணிபுரிந்தவர் புகழ்பெற்ற பேராயர் ஆஸ்கர் ரொமேரோ. உள்நாட்டுப் போரில் துன்புற்ற எல் சால்வதோர் மக்களுக்கு அன்று பேராயர் ரொமேரோ வெளியிட்ட கிறிஸ்மஸ் செய்தியின் ஒரு பகுதி: "உண்மையில் ஏழையாக மாறாதவர்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட முடியாது. தன்னிடம் எல்லாமே உள்ளன, தான் மட்டுமே தனக்குப் போதும் என்ற மமதையில் வாழ்பவர்களுக்கு இறைவன் தேவைப்படுவதில்லை. அவர்களுக்குக் கிறிஸ்து பிறப்பும் தேவைப்படுவதில்லை. ஏழைகள், பசியுற்றோர், தேவையில் இருப்போர் இவர்களாலேயே கிறிஸ்து பிறப்பு விழாவில் பொருள் காணமுடியும். அவர்களைத் தேடியே எம்மானுவேல், அதாவது கடவுள் நம்மோடு என்ற பெயர்தாங்கிய இறைவன் வருவார். இறைவனைத் தேடிய மேரிமாதா, எலிசபெத்திடம் இறைவனே சென்றார். எங்கள் நம்பிக்கை பயணத்தில், எங்கள் எலிசபெத் யார்? தேடிப் பயணமாவோம். கண்டு பிடிப்போம் "கடவுள் நம்மோடு" இருப்பார்

ம.பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

# ஹற்றனில் பேருந்து விபத்து!

- மூவர் உயிரிழப்பு
- 30 இற்கும் மேற்பட்டோர் காயம்



(ஹற்றன்)

ஹற்றன் - மல்லியப்பு பகுதியில் நேற்றுக் காலை பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹற்றனில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் இவ் விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

# விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அரிசி இறக்குமதி செய்யப்படும்

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

நாட்டில்தற்போது 22,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அரிசியை தற்போது பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அரிசி இறக்குமதி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்த அவர் மேலும் 10,000 மெற்றிக் தொன் அரிசி நாட்டிற்குக் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் சந்தையின் தேவையைக் கருத்தில் கொண்டு அரிசி இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ள காலப் பகுதியை நீடிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் "உள்நாட்டு விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாதவாறு அரிசி இறக்குமதி மேற்கொள்ளப்படுவதாகவும் இந்தச் செயற்பாடு சில கட்டுப்பாடுகளுடனே இடம்பெறுவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார். (நி-8)





| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 600 | 550 | 600-700 | 600 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 1300 | 1200 | 1300 | 1000 |
| தக்காளி | 650 | 650 | 250 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 220 | 120-150 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 300 |
| கரட் | 250 | 220 | 200 | 300 |
| பூசணி | 250 | 200 | 180 | 300 |
| புடோல் | 300 | 300 | 300 | 400 |
| வாழைக்காய் | 150 | 100 | 80-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 150-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 300 | 360 | 250 |
| பாகற்காய் | 1800 | 1800 | 1500 | 1600 |
| வெண்டக்காய் | 250 | 300 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 650-800 | 600 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 300 | 450 |
| கறிமிளகாய் | 800 | 800 | 650 | 800 |
| முருங்கைக்காய் | -- | 250 | -- | -- |
| போஞ்சி | 600 | 400 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 400 | 300-500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 100-150 | 160-220 |
| இராசவள்ளி | -- | 850 | 750 | 800 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 |
| [illegible] | [illegible] | 80 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா

மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிச 25) - 2024



இடம் - யாழ்ப்பாண கலாசார மண்டபம்
காலம் - காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை



## திருமுறைகள் நகர்வலம்

(காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை)

வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் வழிபாட்டைத் தொடர்ந்து, திருக்கோயில் வாயிலிலிருந்து யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

---

உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட
சைவ மாணவர் சபை நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா

தென்னாடு

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 (2024) மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிச 25) புதன்கிழமை, யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடாத்தத் திருவருள் கூட்டியுள்ளது.

## மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) புதன்கிழமை

காலை 8.30 மணியளவில் வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் வழிபாட்டை தொடர்ந்து திருக்கோயில் வாயிலிலிருந்து யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை யானை மீது திருமுறைகள் நகர்வலம் இடம்பெற்று அரங்கங்கள் ஆரம்பமாகும்

## காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்

(காலை 9. 30 மணி தொடக்கம் 12.50 மணி வரை)

9.30 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
(சிவத்திரு. தனியொளிசிவம் அகரன் - செந்தமிழ் அருச்சுனைஞர்)

9.45 மணி - வரவேற்பு நடனம் - செல்வி. அன்கா அன்டன் கௌரிதாசன்
(யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

9.55 மணி - தொடக்க உரை - சிவத்திரு. நாகலிங்கம் வேதநாயகன்
(ஆளுநர் - வட மாகாணம்)

10.00 மணி - அருளுரை - சீர்வளர்சீர் திருப்பெருந்தவத்திரு சாது சண்முக அடிகளார்
(குருமகா சந்நிதானம் - பழனி ஆதீனம்)

10.20 மணி - திருமுறை விண்ணப்பம் - கலாநிதி கிருபாசக்தி அம்மையார் குழுவினர்
(இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

10.40 மணி - தலைமை உரை - சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
(முதல்வர் - சிற்றி காட்வெயார், யாழ்ப்பாணம் )

10.50 மணி - வாழ்த்துரை - பேராசிரியர். சி. சிறிசற்குணராசா
(துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

11.00 மணி - வாழ்த்துரை - சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன்
(பிரதம செயலாளர் - வட மாகாணம்)

11.05 மணி - தென்னாடு முதல்வர் உரை - சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன்

11.10 மணி - சிறப்புரை - 'திருநெறியத் தமிழ்' - முனைவர் கோ. ப. நல்லசிவம்
( தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர், மெய்யியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் )

12.40 மணி - கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு

அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.50 முதல் 1.30 மணி வரை

### மார்கழிப் பெருவிழா கொடையாளர்கள்

சிவத்திரு. தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார்
சிவத்திரு. தெய்வநாயகம் சௌந்தரராசா
சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன்
சிவத்திரு. நடராஜா ராஜ்குமார்
சிவத்திரு. சிவராசா சதீஸ்
சிவத்திரு. குலசேகரம் ஜெயராஜ்
சிவத்திரு. தனிகாசலம்பிள்ளை நந்தனன்
சிவத்திரு. தியாகராஜா ஜெகசீலன்
சிவத்திரு. தயாநேசன் கர்ணன்
சிவத்திரு. தனலிங்கம் ஐங்கரன்
சிவத்திரு. பொன்னம்பலம் சிவபாலன்
சிவத்திரு. மகேந்திரன் தேதீஸ்வரன்

---

உ
திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

## மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்

(1.30 மணி முதல் 5.00 மணி வரை)

1.30 மணி - அருளுரை - தவத்திரு. வேலன் சுவாமிகள்
( ஆதீன முதல்வர் - சிவகுரு ஆதீனம் )

1.40 மணி - தலைமை உரை - சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம்
(தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)

1.50 மணி - நாட்டிய அஞ்சலி - இணுவில் குமரநர்த்தனாலயம்

2.05 மணி - சிறப்புரை - 'அடியார் பெருமை' - சிவ. பழனிச்சாமி குமாரலிங்கம்
(செந்தமிழ் வேள்விச் சதுரர்)

2.50 மணி - சிறப்புரை - 'சங்கரன தாள் மறவாமை பொருள்' - பேராசிரியர். ஸ்ரீ பிரசாந்தன்
(தமிழ்த் துறை தலைவர் - பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.35 மணி - பட்டிமண்டபம் - இன்றைய இளையோரின் பத்திநெறியை வளர்ப்பதில் பெரிதும் பங்களிக்கும் சூழல் குடும்பமே! பாடசாலையே!
தலைமை - சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

4.35 மணி - 'மெய்கண்டார் விருது' வழங்கல் நிகழ்வு

4.55 மணி - திருவாசக பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கல
(சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக நடாத்தப்பட்டது)

4.50 மணி - நன்றியுரை - சிவத்திரு. வனராஜ் சசிராஜ்
(தலைவர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. செந்தமிழாதன் (இளம்புலவர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**021 222 9722 / 070 770 1111**

### மார்கழிப் பெருவிழா கொடையாளர்கள்

சிவத்திரு. நவரத்தினம் தங்கேஸ்வரன்
சிவத்திரு. சர்வானந்தராஜா பரமநாதன்
மருத்துவர் சிவமகாலிங்கம் அரவிந்தன்
சிவத்திரு.குமாரசாமி கங்கைவேணியன்
தென்னாடு சிவமடம்

புளியங்கூடலைச் சேர்ந்த அமரர். இராஜேஸ்வரி பாலச்சந்திரன் பிரசாத் மற்றும் அமரர். பாஸ்கரன் பாலச்சந்திரன் பிரசாத் (எழுசன் கல்வி நிலையம்) அவர்கள் நினைவாக திரு. சதீஸ்...

---

உ
திருச்சிற்றம்பலம்

# தென்னாடு
# அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயில்



பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி
வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி
உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி
ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி
ஐம்பூதநாதரே போற்றி போற்றி

அருளாளர்கள் வளவாளர்கள்



பிரதம விருந்தினர் | சிறப்பு விருந்தினர் | சிறப்பு விருந்தினர் | தலைமை உரை (காலை) | தலைமை உரை (மாலை)



பட்டி மண்டபம்

**இன்றைய இளையோரின் பத்திநெறியை வளர்ப்பதில் பெரிதும் பங்களிக்கும் சூழல் குடும்பமே! பாடசாலையே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையறிந்து உதவி செய்ய பகுத்தறியும் சக்கியெனும் பக்குவம் தேவை. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வேலை வாய்ப்புக்கான திட்டமிடல்கள் அவசியம்

ஒரு நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையுடன் உள்ளது. அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் திருப்தியாக இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட வேண்டுமாயின், அதற்கான ஒரே வழி நாட்டிலுள்ள அத்தனை இளைஞர் யுவதிகளும் வேலை செய்வதற்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

எனினும் நம் நாட்டில் இருக்கக்கூடிய பெரும் பிரச்சினை வேலையின்மைதான்.

ஆம், நேற்று முன்தினம்(20) வலம்புரி நாளிதழின் வெள்ளி விழா நிகழ்வு இடம்பெற்ற போது அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்; இளைஞர் யுவதிகள் எவரும் வேலையில்லாமல் வீடுகளில் இருக்கக்கூடாது.

அவர்களுக்கான வேலைவாய்ப்பைக் கட்டாயமாக நாம் வழங்க வேண்டும். அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கூறியிருந்தார்.

அதாவது தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தையே அழித்திடுவோம் என அன்று பாரதி கூறியதில், சிறு திருத்தம் செய்து; தனியொரு மனிதனுக்கு வேலையில்லையெனில் இந்த ஜெகத்தையே அழித்திடுவோம் எனப் பொருள் படுத்துகிறார் பேராசிரியர் அவர்கள்.

ஆம், உத்தியோகம் புருசலட்சணம் எனச் செப்பி நிற்கிறது நம் தமிழ் மொழி.

அதாவது, ஒருவர் வேலை செய்வாராயின் அவரால் ஒரு குடும்பம் சீவிக்கும். அதேபோல் அந்தக் குடும்பத்தில் இருக்கக்கூடிய வேலை செய்யும் வயதை அடைந்தவர்கள் அனைவரும் வேலை செய்யும்போது, அந்தக் குடும்பம் மகிழ்ச்சியான குடும்பமாக மாறும்.

இங்குதான் வேலை செய்ய வேண்டிய வயதினருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் போது, இளைஞர் சமூகம் பிறழ்வான பாதையில் செல்வதற்கான சந்தர்ப்பம் தடுக்கப்படும்.

தவிர, வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் போது படிப்பறிவும் பட்டறிவும் இணைகின்றன.

இதையும் கடந்து மேற்படிப்புகள், சமூகத்தை அறிதல், முன்னேற்றமடைந்த நாடுகளின் திட்டமிடல்களை - முகாமைத்துவ ஒழுங்குபடுத்தல்களை அறிதல் மற்றும் அவற்றைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகளும் கிடைக்கப் பெறுகின்றன.

ஆக, ஒரு நாட்டில் சட்டத்துக்குப் புறம்பான காரியங்கள், சமூகச் சீர்கேடுகள், பிறழ்வுகள், குற்றச்செயல்கள், குழப்பங்கள் ஏற்படுவதற்கும் வறுமை, பசி, பஞ்சம் தலைவிரித்தாடுவதற்கும் அடிப்படையாக இருப்பது வேலையின்மை என்பது புரிதற்குரியது.

ஆக, எங்கள் அனைத்து இளைஞர் யுவதிகளும் வேலை செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அவ்வாறான கவனம் என்பது, விவசாய கடல்தொழில் நடவடிக்கைகள், உற்பத்தி நிறுவனங்கள், கைத்தொழில் முயற்சிகள் என்பவற்றின் உருவாக்கமும் சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்புமாக இருக்க வேண்டும்.

# தேர்தல் செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பொலிஸ் திணைக்களத்தில் பெயர்கள் வழங்கத் திட்டம் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான செலவின அறிக்கைகளை வழங்காத வேட்பாளர்களின் பெயர்களைப் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களின் பெயர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அது தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி பாராளுமன்றத் தேர்தல் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை வழங்குவதற்கான அறிவிப்பின்படி குறித்த அறிக்கையை சமர்ப்பித்த வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் மாவட்ட செயலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களின் பட்டியலை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளது. (ம-7)

### அமைச்சர் பெயருக்கு முன்னால் கலாநிதி

# பாராளுமன்ற அதிகாரிகளிடம் குற்றப்புலனாய்வு வாக்குமூலம்

(கொழும்பு)

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி என்று எழுதப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாராளுமன்ற அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் (20) பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்து பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் உட்பட மூன்று அதிகாரிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் பெற்றிராத "கலாநிதி" பட்டத்தை பாராளுமன்ற இணையத்தளத்தில் தனது பெயருக்கு முன்னால் தவறாகக் குறிப்பிட்டமை தொடர்பில் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பாராளுமன்ற அதிகாரிகள் குழுவிடம் நேற்று முன்தினம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

# குழந்தைகள், தாய்மாரின் ஊட்டச்சத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களை முறையாகப் பராமரிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், அதற்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி குன்லே அதெனியி ஆகியோருக்கிடையில் நேற்று சனிக்கிழமை (21) இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்பில் நாட்டில் அமுல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் புரிந்துணர்வைப் பெற்று ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பிரதிநிதி குன்லே, இலங்கையின் மருத்துவமனை அமைப்பு மற்றும் இலவச சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பையும், சுகாதார திட்டங்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கையில் சுகாதார சேவையில் சில பின்னடைவுகள் காணப்பட்ட போதிலும், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதனை முறையாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (ம-7)

### நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு

# இறைச்சியுடன் வந்தவரை மடக்கிப் பிடித்த இளைஞர்கள்

நெடுந்தீவில் இருந்து விடுமுறையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் கொண்டு வந்த பொதியில் இறைச்சி இருப்பதாக சந்தேகித்து அதனை குறிகாட்டுவானில் வைத்து சோதனையிட்ட போது, அதில் இறைச்சி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது நேற்று மாலை நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கி வந்த படகில் விடுமுறையில் செல்வதற்காக வந்த பொலிஸ் உத்தியோகத்தர் கொண்டுவந்த பொதியில் இறைச்சி இருப்பதாக சந்தேகம் தெரிவித்து குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் வைத்து, கடந்த பல நாட்களாக கால்நடைகளைப் பறிகொடுத்த இளைஞர்கள் கடற்படையினரின் உதவியுடன் பரிசோதனை செய்தபோது இறைச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் குறித்த பொலிஸாருடன், பொதியும் குறிகாட்டுவானில் கடற்படையினரின் உதவியுடன் தடுத்து வைத்துவிட்டு யாழ்.அரச அதிபர், நெடுந்தீவுப் பிரதேச செயலருக்கு தகவல் வழங்கப்பட்டதுடன் இது தொடர்பாக வேலணைப் பிரதேச செயலருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (ம-7,33)

### களுத்துறையில்

# இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

(களுத்துறை)

களுத்துறை, கட்டுகுருந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பயாகலப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

களுத்துறை கட்டுகுருந்த சனச மாவத்தையில் வசிக்கும் பத்தரமுல்ல கிராமத்தைச் சேர்ந்த அமித் பிரியதர்ஷன என்ற 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு சைவத் தமிழ் இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாமானது இன்று ஞாயிற்றுக்கிழமை (22) காலை 09 மணி முதல் நண்பகல் 12 மணி வரை அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு உயிர்காக்கும் இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோப்பநாய்கள் சகிதம் சோதனை நடவடிக்கை

(கிளிநொச்சி)


பண்டிகை கால ங்களில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறக் கூடாது என்ற நோக்கில் கிளி நொச்சி பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டு வரு கின்றனர்.

வீதி ஒழுங்கு களை மீறுபவர்கள் சட்ட விரோத செயற் பாடுகளில் ஈடுபடுப வர்கள் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தக வலை அடுத்து மோப்ப நாய்கள் சகி தம் வாகனங்களை சோதனையிட்டு வரு கின்றமை குறிப்பிடத் தக்கது. (நி-8-316)



# அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் ஜனாதிபதியின் தாய்

## ஜனாதிபதியின் எளிமை குறித்து பலரும் பாராட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது தாயை வைத் திய சாலையில் சென்று பார்த்த புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியின் தாயார், சுகயீனம் கார ணமாக அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் அனு மதிக் கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இந்தநிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தனது தாயை ஜனாதி பதி நேரில் சென்று பார்வையிட்ட புகைப் படம் தற்போது சமூக வலைத்தளங்களில் அதிகளவானோரால் பகிரப்பட்டு வருகின் றது.

குறிப்பாக, கடந்த காலங்களில் ஆட்சி யில் இருந்த அரசியல் வாதிகளின் குடும் பத்தாருக்கு, உறவினர் உள்ளிட்டவர்களுக்கு சுகயீனம் என்றாலும் கூட தனியார் மருத்து வமனைகளில் சிறப்பு சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின் றன.

இவ்வாறான நிலை யில், ஜனாதிபதியைச் சார்ந்தவர்கள் அரச வைத்தியசாலைக ளில் சேவையைப் பெற் றுக் கொள்வது குறித்து பலரும் தமது வாழ்த் துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, ஜனா திபதி அநுர குமார திஸாநாயக்க எளி மையாக செயற்படு வது தொடர்பில் பாராட் டப்பட்டாலும் கூட அதே சமயம் விமர்சனங்க ளும் முன்வைக்கப்ப ட்டு வருகின்றன.(நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம் -உத்தராடம்
கி.பா-15 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Computer Science Engineering, Software Engineer.
எதிர்பார்ப்பு: அரச /தனியார் Degree.
தொ.இ: B/15032

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்:5'8"
தகைமை/தொழில்:O/L,Wiring(Own)
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/15033

பிறப்பு:1975-இந்து
நட்சத்திரம்:கேட்டை
12 இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: A/L,Shop(Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15035

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:மகம்
7இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Psychological(UK Uni.PVT) NHS(Gov.).
எதிர்பார்ப்பு: UK Only.
தொ.இ: G/15031

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா-39 1/4
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:Administration Assistant(Swiss)
எதிர்பார்ப்பு: Degree,உத்தியோகம்
தொ.இ: G/15034

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா:32
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Engineer,London.
எதிர்பார்ப்பு:Degree London.
தொ.இ: G/15043

கல்யாண்மாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

22.12.2024
மார்கழி 07, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பிற்பகல் 4.42 மணிவரை

பூரம் முற்பகல் 8.47 மணிவரை
சுபநேரம் 9.25-10.55 மணிவரை
இராகுகாலம் 4.55-6.25 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவோணம்

வளவன்

**மேஷம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்** – செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**துலாம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

**மகரம்** – காலை நேரம் தடைப்பட்ட காரியங்கள் மாலை நேரம் கைகூடும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், நீங்கள் நேசித்த ஒருவருடன் யோசித்து பேச வேண்டிய நாள்.

**ரிஷபம்** – பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**சிம்மம்** – போசன சுகமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** – தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உங்களின் செயற்பாடுகளால் புகழ் கிடைக்கும்.

**கும்பம்** – நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கன்னி** – வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், உறவினர்கள் தொடர்பான காரியங்களில் நிதானம் தேவை.

**தனுசு** – ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ரோக பயமுண்டு.

**மீனம்** – எதிர்காலம் இனிமையாக திட்டங்கள் தீட்டுவீர்கள், தேக நலனில் உற்சாகம் பிறக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

விட்டுக் கொடுக்காதவர்கள் தங்களையே இழந்துவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரியா...

வர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக் கிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றுச் சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதன் போது, இலங்கைக்கும் கொரியாவுக்கும் இடையில் நீண்டகால மாக நிலவி வரும் உறவுகளைத் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்காக தனது நன்றியைத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மேலும் இந்த உறவுகளைப் பேணிச் செல்லுமாறு கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் கொரிய குடியரசில் வேலை வாய்ப்புக்களுக்காக இலங்கையர் களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்கு மாறும், அந்த வேலைவாய்ப்புக்களுக் குத் தேவையான பயிற்சி பெற்ற ஊழி யர்களை வழங்குவதற்கு நாடாக உச்ச பட்சமாக அர்ப்பணிப்புடன் செயற்படு வதாகவும், அதற்கு எதிர்க்கட்சியி லிருந்தும் தனது பங்களிப்பை வழங்கு வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது தெரி வித்தார். (ம-7)

## படையினர்...

தலைமன்னாரில் படையினர் கைய கப்படுத்தியுள்ள பொதுமக்களின் காணி களை விடுவிக்குமாறு பிரதமரிடம் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருக் கிடையிலான சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு பிரதமரின் அலுவல கத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது தலைமன்னார் பகுதி யில் படையினர் கையகப்படுத்தியுள்ள மக்கள் காணிகள் பொது இடங்கள், ஆலயங்களுக்குச் சொந்தமான காணி களை மக்களது பாவனைக்காக வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், இந்தியாவிற்கு யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்கள் தமது யாத்திரிகைக்கான விமானப் பயணக் கட்டணம் அதிகரித்துள்ளமையையும் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக அவர் கள் பல அசௌகரியங்களுக்கு மத்தி யில் இந்து கலாசார அமைச்சிடம் கையெழுத்துப் பெற்ற பின்னரே கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுவதையும் செல்வம் அடைக் கலநாதன் சுட்டிக்காட்டினார். (ம-7)

## வாக்குறுதி...

களை நடத்துதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெ டுப்பதில் அரசாங்கம் பின்வாங்குவது போல் தென்படுவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் நோர்வே நாட்டுத் தூதுவர் மே-எலின் ஸ்ரெனரி டம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியாவுக் கான நோர்வேத் தூதுவர் மே-எலின் ஸ்ரெனருக்கும் இலங்கைத் தமிழ் அர சுக் கட்சி உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோருக்கும் இடையிலான சந் திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் புதிய அரசாங்கம் ஆட்சிப் பீடமேறியிருக்கும் நிலையில், அவர் களால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவ்வாறு அணுகப்படுகின்றன? ஏதே னும் முன்னேற்றகரமான நகர்வுகள் இடம்பெற்றிருக்கின்றனவா? என நோர்வேத் தூதுவர் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதிநிதிகள் ஏற்கெனவே வாக்குறுதி அளிக்கப்பட்ட தைப் போன்று வட, கிழக்கு மாகாணங் களில் காணிகள் முழுமையாக விடு விக்கப்படவில்லை எனவும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசி யல் கைதிகள் இன்னமும் முழுமை யாக விடுதலை செய்யப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியதுடன், இருப்பி னும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என அரசாங்கம் வாக்குறுதி அளித்திருப்பதாகத் தெரி வித்தனர்.

அத்தோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்து தல் என்பன தொடர்பில் ஏற்கெனவே வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து தற் போது அரசாங்கம் பின்வாங்குவது போல் தென்படுவதாகவும், அவற்றுக் குரிய நடவடிக்கைகளை முன்னெடுப் பதை அரசாங்கம் தாமதப்படுத்துவ தாகவும் சுமந்திரன் மற்றும் சாணக் கியன் நோர்வேத் தூதுவர் மே-எலின் ஸ்ரெனரிடம் எடுத்துரைத்தனர்.

இருப்பினும், புதிய அரசாங்கம் ஆட்சிப்பீடமேறி சில வாரங்களே கடந் திருப்பதனால், அவர்களது நடவடிக்கை கள் தொடர்பில் உடனடியாக ஒரு மதிப் பீட்டுக்கு வருவது கடினம் என மே- எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக்காட்டிய அவர் கள், எனவே அவர்களது நகர்வுகள் குறித்துத் தொடர்ந்து அவதானம் செலுத்தி வருவதாகக் குறிப்பிட்டனர். (ம-7)

## அநுரவைக்...

சம்பவம் தொடர்பில் கண்டியில் உள்ள முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் வழங்கிய தகவலின் அடிப் படையில் விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும், அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதாக வும் குற்றப் புல னாய்வுப் பிரிவி னர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப் பித்துள்ளனர்.

கோட்டபாய ஆதரவு இரா ணுவப் புலனாய் வுத் தரப்பின் பின் னணியில் இப் படுகொலைத் திட்டம் அரங்கேற் றப்பட்டதாக ஆரம் பக்கட்ட விசார ணையிலிருந்து தெரிய வருகின் றது.

இதனிடையே அண்மையில் தேசிய புலனாய் வுப் பிரிவின் பணிப்பாளர் பதவி யிலிருந்து நீக்கப் பட்டமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## காலி...

நபர் மர்ம நபர் களால் சுட்டுக் கொலை செய் யப்பட்டுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இரவு மர்மநபர்கள் மேற் கொண்ட துப்பாக் கிச்சூட்டில் பெத் தும் அல்லது "லொக்கா" என்ற நபர் கொல்லப் பட்டார்.

தடல்ல பிர தேசத்தில் பெண் ஒருவருடன் மோட்டார் சைக் கிளில் பயணித்த போதே துப்பாக் கிச் சூடு நடத்தப் பட்டுள்ளது.

படுகாயமடைந்த நபர் காலி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் ஏற் கெனவே உயிரி ழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ள னர். (ம-7)

## கொழும்பில்...

இந்தக் கப்பலானது, இலங்கை மக்களுக்கு வைத்திய பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்கு வதற்காக இன்று முதல் 27ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-7)

## கசிப்பு...

இதன்போது கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 150,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் 150,000 மில்லி லீற்றர் வடி ஆகியன மீட்கப்பட்டதுடன் ரூபாய் ஒரு இலட்சம் பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட் டுள்ளன. (ம-7,250)


மஹஜன சம்பத — திகதி 2024.12.21 — சீட்டிழுப்பு இலக்கம் 5692 — O 2 1 5 9 8 1
அத சம்பத — O 5 9 8 1 — சீட்டிழுப்பு இலக்கம் 267
தன நிதானய — திகதி - 2024.12.21 — சீட்டிழுப்பு இலக்கம் - 1722 — H 16 26 57 81 H — 99244
மெகா பவர் — திகதி 21/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2040 — A 12 03 08 25 51 — 027011
லக்கி 7 VIP — திகதி 2024.12.21 — சீட்டிழுப்பு இலக்கம் 518 — C 2 9 2 9 8 7 C
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3934 — சீட்டிழுப்பு திகதி 21.12.2024 — E 22 28 36 47 — E 030598
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.21 — சீட்டிழுப்பு இலக்கம் 1001 — தனுசு 04 12 13 22 தனுசு — 036005 — 05
உத்தியோகபூர்வ முடிவுகள் — 21.12.2024 — 400 — Q 6 3 8 2 0 4 — 51804 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,648,322.00
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2666 — 2024.12.21 — சனிக்கிழமை — 21 53 65 76 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,202,659.20
சனிதா — 21.12.2024 — 4827 — 13 62 70 71 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,139,057.20 — 90896
சசிரி — 583 — 21.12.2024 — சனிக்கிழமை — 25 32 33 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4378 — 21.12.2024 — சனிக்கிழமை — 09 23 39 60 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,930,956.40 — 142966
கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — F 07 19 46 53 63 — 1842 — 21.12.2024 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.558,942,290.20
அத கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம் : 2492 — 2024.12.21 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,096,143.20 — 09 40 41 75 V — 323588


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். காங்கேசன்துறையில் K.K.S சந்தி பலாலி விமான நிலையம் என்பவற்றுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**075 521 3533** (2806)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இராசபாதை வீதி(முகாமைத்துவ பீடத்திற்கு அருகாமையில்) G.P.S மைதான வீதியில் 1 ½ பரப்பில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

**077 656 7844** (2779)

## வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 515 2015** (2816)

## V2 VISA SERVICES

### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1870)

## HAPPY SUPERMARKET DELIVERY

உங்கள் Happy Supermarket Home delivery வடமராட்சி வாடிக்கையாளர்களிற்காக செவ்வாய்க்கிழமைகளில், 6000/= இற்கு மேற்பட்ட கொள்வனவுகளிற்கு, திங்கட்கிழமை 5 pm இற்கு முன் Whatsapp மூலமாக ஓடர்களை பதியவும்.

**Happy Supermarket - Urumpirai**

**076 800 6500** (657)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகளுடன் வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை விறாந்தை தனிக் கிணறு என 2 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு குடியிருப்பதற்கேற்ற வகையில் உடனே விற்பனைக்குண்டு.

Whatsapp : **+61 421290240** (2762)

## பெண் பராமரிப்பாளர் தேவை

காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை வயதான மூதாட்டியை பராமரிப்பதற்காக பெண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 993 5844** (2793)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (655)

**மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் :**

**077 391 2298/ 076 009 8661**

## எமது நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்பு

தற்போது A/L எழுதிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தரம் 10, O/L, A/L படித்தவர்கள் இணைய முடியும். சம்பள அளவுத் திட்டம் - 25,000 தொடக்கம் 45,000 வரை தகுதி காண் காலத்தின் பின்னர் அடிப்படைச் சம்பளம் EPF, ETF அனைத்தும் வழங்கப்படும். (658)

**077 985 8580**
**076 888 9384**

## மணமகள் தேவை

லண்டனில் வசிப்பவர் (PR) 1981 டிசம்பர் மாதம் பிறந்தவர் A/L பூரண சித்தி பெற்றவர் இவருக்கு ஐரோப்பா நாடுகளில் இருந்து தமிழ்ப் பெண்ணை எதிர்பார்க்கின்றோம். (2814)

**077 668 3717**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. (2788)

தொடர்புகளுக்கு :

**077 919 1529**

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :

**075 033 6759** (620)

## முட்டை மலிவு விற்பனை

பிறக்கப்போகும் புது வருடத்தை முன்னிட்டு முப்பத்து நான்கு வருடப் பூர்த்தி. யாழ். நகரில் யாழ். முட்டை வியாபார நிலையமென இயங்கி வந்த கடை தற்பொழுது பெயர் மாற்றத்துடன் VS முட்டை விற்பனை நிலையமென மாற்றப்பட்டு முட்டை விலை 25/= (இருபத்தைந்து ரூபாய்) ஆகும். இதனை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (2805)

VS பாம் முட்டை, இல 2, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 6234 204, 021 222 4365**

# மரண அறிவித்தல்



பிறப்பு 06 - 01 - 1971

இறப்பு 20 - 12 - 2024

## சிவலிங்கம் சுதர்சினி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சுதர்சினி 20.12.2024 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் - மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சந்துஜா, தாரணி, தில்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அபினேஸ், டிசாந்த் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபாசினி, சுரேஸ்குமார், சுந்தர்ராஜன், சுமித்திரா, சுவேந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணகுமார், பரம்சோதி, நாகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று 22.12.2024 (ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

லோட்டன் றோட்,
நவாலி றோட், நவாலி வடக்கு,
மானிப்பாய். (654)

தகவல் :
குடும்பத்தினர்

# சிறுநீரகம் தேவை

**“O” குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு “O” குருதி வகை சிறுநீரகம் அவசரமாகத் தேவை.**

**வயதெல்லை : 42 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்.**

HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும். (2802)

**076 540 6732** Call/ Whatsapp
**077 723 8937** Call

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 01 5Kg Prima மா பை | - 920/= | ~~1150/=~~ |
| 1Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1Kg பயறு | - 570/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 650/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு No 1 | - 780/= | |
| 01 விஜிதா அரிசி 10Kg | - 2700/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= | |
| 1Kg கீரி சம்பா | - 255/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை அரிசி (உள்நாடு) | - 220/= | Max 1Kg |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |

Kothmee ~~130/=~~ 115/=



Max 01 400g Anchor 990/= ~~1050/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (657)

Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.